பக்கங்கள்: 12

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஐப்பசி 21 | புதன்கிழமை 07.11.2018 | கதிர் 02

### இது ரகசியம் அல்ல!

“பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ...?” - ஒரு கேள்வி இருக்கின்றது.

நேற்று முன்தினம் கொழும்பில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற தீபாவளித் திருநாள் கொண்டாட்டத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை நேரில் பக்கம் 02 »

# நாடாளுமன்றை 14ஆம் திகதி வரை முடக்கி வைத்திருப்பது அராஜகம்!

## அரசியல் குழப்பத்தால் ஜனநாயகமும் கேள்விக்குறி சம்பந்தனுடனான சந்திப்பில் அமெ. தூதுவர் காட்டம்



**கொழும்பு, நவம்பர் 07**

**ஒரு நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டால் அதற்கு ஜனநாயக வழிமுறைகள் மூலம்தான் தீர்வு காணப்பட வேண்டும். ஆனால், இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப சூழ்நிலையால் இந்நாட்டின் ஜனநாயகமே கேள்விக்குறியில் உள்ளது.**

**- இவ்வாறு இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ் தெரிவித்தார்.** பக்கம் 11 »

## சபாநாயகரைச் சந்தித்தார் புதிய அமெரிக்கத் தூதுவர்

### நாடாளுமன்றைக் கூட்ட வலியுறுத்தல்



கொழும்பு,நவ.07

இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராகப் பொறுப்பேற்றுள்ள அலய்னா ரெப்லிட்ஸ், நேற்றுக் காலை சபாநாயகர் கரு ஜெயசூரியவைச் சந்தி பக்கம் 11 »

## ரணிலைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கியமை அரசமைப்புக்கு முரண்

### நாடாளுமன்றை உடன் கூட்ட அழுத்தம் கொடுங்கள் அமெரிக்கத் தூதுவரிடம் எடுத்துரைத்தார் சம்பந்தன்

கொழும்பு, நவ.07

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியிலிருந்து நீக்கியமை, புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை நியமித்தமை, நாடாளுமன்றத்தைக் கூட்ட விடாமல் முடக்கி வைத்திருக்கின்றமை, பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்துக் காட்டுவதற்காகப் பல கோடி ரூபாவை அள்ளி வீசி எம்.பிக்களை விலைக்கு வாங்குகின்றமை என இலங்கையில் கடந்த வாரத் பக்கம் 11 »

## அடுத்த தீபாவளிக்குள் தீர்வு



### சம்பந்தன் முன்னிலையில் ஜனாதிபதி மைத்திரி உறுதி

கொழும்பு, நவ.07

முன்னாள் பிரதமரினால்தான் தமிழர்களுக்கான தீர்வு வழங்குவது தள்ளிப் போனது. அதனால்தான் பிரதமரை மாற்றிப் புதிய சபையுடன் நாட்டுக்குத் தேவையான தீர்வைப் பக்கம் 11 »

## எரிபொருள் பவுசருடன் மோ.சைக்கிள் நேரே மோதி இரு இளைஞர்கள் சாவு!

### தீபாவளியன்று கிளிநொச்சியில் துயரம்



கிளிநொச்சி,நவ.07

எரிபொருள் பவுசரும் மோட்டார் சைக்கிளும் மோதுண்டு ஏற்பட்ட கோர விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர்.

கிளிநொச்சியில் ஏ9 வீதியில் தீபாவளி தினமான நேற்றிரவு 7.30 மணி பக்கம் 11 »

## தனக்குள்ள தார்மீகக் கடமையை மறந்திருக்கமாட்டார் ஜனாதிபதி

### நினைவுபடுத்தினார் சம்பந்தன்

கொழும்பு, நவ. 07

தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கு அடுத்த தீபாவளிக்கு இடையில் கௌரவமான தீர்வு எட்டப்பட வேண்டும் எனவும் அதற்கு எங்கள் எல்லோருக்கும் இறைவன் நல்ல புத்தியை வழங்க வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீபாவளிக் கொண்டாட்ட நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். பக்கம் 11 »

## ‘பல்டி’ அடித்தவர்களில் 8 பேர் மீள ஐ.தே.க.வுக்கு!

### ரஞ்சித் மத்தும பண்டார தகவல்

கொழும்பு, நவ. 07

மஹிந்த ராஜபக்ச பக்கம் தாவிய மேலும் எட்டுப் பேர் ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணையவுள்ளனர் என்று ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. பக்கம் 11 »


## ஐ.தே.கவுக்கு தாவினார் மைத்திரி தரப்பு எம்.பி.

### கடும் சீற்றத்தில் மைத்திரி-மஹிந்த அணி

கொழும்பு, நவ. 07

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மனு நாணயக்கார, தனது பிரதி அமைச்சுப் பதவியைத் பக்கம் 11 »

## தீர்வு தருவார் மஹிந்த சித்தார்த்தன் நம்பிக்கை



வவுனியா,நவ.07

இனப்பிரச்சனைக்கான தீர்வைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பெற்றுத் தருவார் என நம்புவதாக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

வவுனியா, கோவில் பக்கம் 11 »

## இனிமேலாவது கொள்கை அடிப்படையில் நிறுவனமயப்பட்டு செயற்பட முன்வாருங்கள்

### முன்னாள் முதல்வர் விக்கி அழைப்பு

யாழ்ப்பாணம்,நவ.07

இனிமேலாவது கட்சி நலன்களைப் புறந்தள்ளிவிட்டு கொள்கை அடிப்படையில் நிகழ்ச்சி நிரல் ஒன்றுக்கு அமைவாக செயற்பட முன்வாருங்கள் என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமை தொடர்பாகத் தாம் விடுத்த அறிக்கையிலேயே அவர் பக்கம் 02 »

## இறுதி நேரப் பாய்ச்சல்களால் தெற்கு அரசியலில் பரபரப்பு

கொழும்பு, நவ.07

பிரதான இரு தரப்புகளிலிருந்தும் இறுதி நேரத்தில் தாவல்கள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுவதால் தெற்கு அரசியலில் உச்சகட்ட பரபரப்பு பக்கம் 11 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir



# அரசை எதிர்ப்பதால் நன்மை என்றால் நாம் இன்னும் கூடுதலாக எதிர்ப்போம்

## சுமந்திரன் எம்.பி. திட்டவட்டம்

கொழும்பு, நவ. 08

நாங்கள் அரசை எதிர்க்கும் காரணத்தால்தான் அவர்கள் அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு ஆகியவற்றைச் செய்ய முன்வருவார்கள் என்றால் நாங்கள் இன்னும் கூடுதலாக எதிர்ப்போம்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரன்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும், தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் எனவும் தற்போதைய புதிய அரசு தெரிவித்து வருகின்றமை தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், கடந்த மூன்று வருடங்களில் செய்ய முடியாததை இப்போது செய்ய முடியும் எனின் ஜனாதிபதி ஏன் அதைச் செய்யவில்லை எனவும் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு ஆகியவற்றை தாங்கள் ஆட்சியைக் கைப்பற்றுவதற்குப் பேரம் பேசும் பொருள்களாக நினைத்திருப்பது துரதிஷ்டமான விடயம்.

கடந்த 3 வருட காலத்தில் இந்த விடயங்களை ஜனாதிபதி செய்து முடித்திருக்க முடியும். அப்படிச் செய்து முடித்திருக்கக் கூடிய விடயத்தை இப்போது நான் திடீரெனச் செய்து முடிப்பேன் என்று அவர் சொன்னால் ஏன் இதுவரை செய்யவில்லை?

அவற்றைச்செய்வதால் எமது ஆதரவு தனக்குக் கிடைக்கும் என அவர் நினைப்பது தவறானது. நாங்கள் அவர்களை எதிர்க்கும் காரணத்தால்தான் அவர்கள் இவற்றைச் செய்ய முன்வருவார்கள் என்றால் நாங்கள் இன்னும் கூட எதிர்ப்போம் – என்றார். (ஐ)

# தேர்தலுக்குச் செல்ல ஐ.தே.கவினர் அச்சம்

## வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

அரசியல் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக நாங்கள் பொதுத் தேர்தலுக்குச் செல்லத் தயாராக இருக்கின்றோம் எனத் தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக நாங்கள் பொதுத் தேர்தலுக்குச் செல்லத் தயாராக இருக்கின்றோம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு பின்வாங்கி வருகின்றது. அவர்கள் தேர்தலுக்கு முகம்கொடுக்க அச்சப்படுவதே இதற்குக் காரணமாகும்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாற்றமானது சட்ட ரீதியிலே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதனை யாராவது சவாலுக்குட்படுத்துவதாக இருந்தால் நீதிமன்றம் சென்று தீர்த்துக்கொள்ளலாம்.

அத்துடன் மக்கள் ஆணையுடன் அரசு அமைப்பதற்குத் தேர்தலுக்கு செல்ல நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஆனால் ஐக்கிய தேசிய கட்சியே அதனை தவிர்த்து வருகின்றது – என்றார். (ஐ)

# புதிய அரசைச் சர்வதேச நாடுகள் ஏற்காததை உணர்ந்துகொண்டேன்

## மனு நாணயக்கார மைத்திரிக்குக் கடிதம்

புதிய அரசைச் சர்வதேச நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை பின்னரே உணர்ந்துகொண்டேன் எனப் பிரதியமைச்சர் பதவியை இராஜினாமா செய்துள்ள மனு நாணயக்கார தெரிவித்தார்.

தமது பிரதியமைச்சர் பதவியினை இராஜினாமா செய்துள்ளமை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

மஹிந்த ராஜபக்ஷவை நீங்கள் பிரதமராக நியமித்து நாடாளுமன்ற அமர்வுகளை இடைநிறுத்தியதைத் தொடர்ந்து கடந்த சில நாட்கள் குழப்பம் மிகுந்தவையாகக் காணப்படுகின்றன.

அவ்வேளை நான் உங்களுடன் பேச்சுக்களை மேற்கொண்டேன். நீங்கள் தெரிவித்ததை ஏற்றுக்கொண்டு புதிய அரசில் பிரதி அமைச்சராகப் பணியாற்றும் அரசியல் முடிவையெடுத்தேன்.

உங்களின் நடவடிக்கையால் ஏற்படக்கூடிய பாரதூரமான விளைவுகளைத் தெளிவுபடுத்திச் சபாநாயகர் விடுத்துள்ள அறிக்கையொன்றை வாசிக்க நேர்ந்தது.

பதவிப்பிரமாணம் செய்துள்ள புதிய அரசை எந்த உலகநாடும் ஏற்றுக்கொள்ளவில்லை. இது எனது ஜனநாயக மனச்சாட்சியை ஆழமாகச் சிந்திக்கத் தூண்டியுள்ளது. நான் எனது அரசியல் சகாக்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் தீவிர பேச்சுக்களை மேற்கொண்ட பின்னர் இவ்வாறான சட்டவிரோத அரசமைப்புக்கு முரணான நடவடிக்கைகளுக்குத் துணைபோகக் கூடாது என்ற முடிவுக்கு வந்துள்ளேன்.

இதன் காரணமாக எனது ஜனநாயக – அரசியல் நம்பிக்கைகள் மற்றும் மனச்சாட்சியின் அடிப்படையில் நான் எனது இராஜினாமாவை சமர்ப்பிக்கின்றேன்.

2015 ஜனவரி 8 ஆம் திகதி தேர்தலில் உங்களுக்குக் கிடைத்த ஆணையும் அதன் பின்னர் தேசிய அரசு உருவாக்கப்பட்டதும் அதிகார துஷ்பிரயோகங்களையும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளையும் ஒழிப்பதற்கே என்பதை நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். இன்று முதல் நான் சபாநாயகரின் நிலைப்பாட்ட ஏற்று பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவையே ஏற்பேன் – என்றுள்ளது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்த ஒரு நண்பர் இப்படிக் கூறினார்.

விவரம் இதுதான்: –

தீபாவளி நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஒரு வட்டமேசையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே ஆகியோர் அமர்ந்திருந்தனர். ஓர் ஆசனம் மேலதிகமாக வெற்றிடமாக இருந்தது.

தூரத்தில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா பிறிதொரு மேசையில் அமர்ந்திருந்தார். அரசியல்வாதிகள் அல்லாத – அதிகாரிகள் மற்றும் பிற அழைப்பாளர்கள் மத்தியில் – அவர் அமர்ந்திருந்தார்.

ஈ.பி.டி.பி. சார்பில் வடக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட தவராசா, பின்னர் அக்கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவுடன் முரண்பட்டு, கட்சி நடவடிக்கையில் இருந்து தள்ளி நின்றமையும், இரண்டு பேருக்கும் இடையில் கருத்து வேறுபாடு உச்சகட்டத்தில் இருந்தமையும் பரகசியமான விடயங்கள் தாம்.

ஈ.பி.டி.பியுடனான செயற்பாடுகளை தவராசா துண்டித்துக் கொண்டார். எனினும் டக்ளஸும் தவராசவும் பொதுமேடையில் – பகிரங்கமாக – மோதிக்கொள்ளவில்லை.

அரசியலில் கருத்துவேறுபாடு முற்றி இருவரும் தனித்தனி 'லைன்' பிடித்துச் செயற்பட்டபோதிலும் நீண்டநாள் நேசமும், நெருக்கமும், நட்புரிமையும் கருதி இருவருமே நாகரிகம் பேணினர். அவர்கள் இருவரும் தங்களுக்குள் முரண்பட்டு நின்றாலும் தவராசாவின் மகன், தனது தந்தையின் முன்னாள் தலைவருடன் தொடர்ந்து நெருக்கத்தையும், அன்புரிமையையும் பேணினார். தந்தை தவராசா அவரது தலைவர் டக்ளஸுடனான தொடர்பாடலைத் துண்டித்திருந்தாலும் அவரின் மகன் அவ்வப்போது ஈ.பி.டி.பி. அலுவலகங்களில் டக்ளஸைச் சந்திப்பதும் வழமை. இந்தப் பின்புலத்தில் நேற்று முன்தினம் அந்தத் தீபாவளி நிகழ்வு நடந்தது.

தூரத்தில் தவராசா அமர்ந்திருக்கின்றமையைக் கண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமது உதவியாளர் ஒருவரை கூப்பிட்டு தவராசாவை பிரதான மேசைக்கு அழைப்பித்தார். அங்கு வந்த தவராசா ஒரு கதிரையை நகர்த்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அருகில் அமரப் போனார். எனினும், ஜனாதிபதி அவரை அழைத்துத் தமக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடை யில் இருந்த கதிரையில் அமரச் செய்தார். அதனால் டக்ளஸ் – தவராசா உரையாடலுக்கு வாய்ப்பிருக்கவில்லை. எனினும், ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் இருந்தபடியே எட்டி இருந்த டக்ளஸுடன் ஒரிரு வார்த்தைகள் உரையாடினர் தவராசா.

அதனை நோட்டமிட்டுக் கொண்டிருந்த எனது நண்பர், இருவரும் அருகருகே அமர்ந்து பேச முடியவில்லை என்ற ஆதங்கத்தையே 'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?' என்று குறிப்பிட்டார்.

டக்ளஸ் – தவராசா ஊடல் இப்போது கூடல் வரை வந்திருப்பது குறித்து விசாரித்தேன்.

டக்ளஸ் தேவானந்தா அமைச்சர் பதவி ஏற்ற அன்று, அவருக்கு வாழ்த்துச்செய்தி ஒன்றை தொலைபேசியில் அனுப்பி வைத்தார் தவராசா. அதைப் பார்த்த டக்ளஸ் அன்று பின்னிரவில் தவராசாவுக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தார். அவ்வளவுதான் முறிந்து போன நட்புக்கு ஒட்டுப்போட்டாயிற்று.

அமைச்சர் டக்ளஸ் புத்திசாலி. எந்த விலை கொடுத்தாவது விடயம் தெரிந்தவர்களை – விவரமான ஆட்களை – தம்பக்கத்தில் வைத்திருந்தால்தான் அமைச்சர் பதவியை மேம்பாடாகப் பயன்படுத்த முடியும் என்பது அவருக்குத் தெரியும்.

அதனால் , பெருநஷ்டத்தை ஏற்படுத்திய தவராசாவின் பிரிவை – பிளவை – மறந்து, அவரை மீள அரவணைத்துக் கொள்கின்றார் தேவானந்தா.

சாதாரண எம்.பியான டக்ளஸுக்குத் தவராசாவின் உதவி தேவையில்லை. ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு, அப் பதவியைத் திறம்பட ஆற்றுவதற்கு தவராசா தேவை.

தேவையான வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்துவது தான் ஒரு தலைவனின் சிறப்பு ...!

-மின்னல்-

## இனிமேலாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்படித் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு :–

இலங்கையில் இன்று அரசமைப்பு நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் மீண்டும் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது என்று எமது அரசியல்வாதிகள் புலம்பத்தொடங்கியிருக்கின்றார்கள். இதில் எந்த அர்த்தமும் இல்லை. ஏனெனில் இதுதான் வரலாறு என்று நன்கு தெரிந்துதான் நாம் அவர்களுடன் கரம் கோத்தோம். பதவிகளைப் பெற்றோம். பணம் பெற்றோம். அவர்களுடன் சேர்ந்து உலகுக்கு நல்லாட்சி என்றோம். ஒருபடி மேலே சென்று அவர்களை நெல்சன் மண்டேலாவுடன் ஒப்பிட்டுபுகழ்ந்து பேசினோம். நாமே அவர்களை மனித உரிமைகள் சபையில் பிணை எடுத்தோம். அரசமைப்பு மாற்றம் என்ற ஒரு மாயைக்குள் எமது இனப்பிரச்சினைக்கான தீர்வைக் கொண்டு சென்று எமது தனித்துவத்தையும் அரசியல் அபிலாஷைகளையும் கரைத்துவிட்டோம்.

ஆனால் சிங்கள அரசியல்வாதிகளோ எம்மைப் பயன்படுத்தி தமக்கு எதிரான சகல தடைகளையும் உடைத்துவிட்டு எந்த விதமான குற்ற உணர்வும் இன்றி த மக்கிடையில் ஓர் அதிகார போட்டியில் இறங்கியுள்ளனர். இந்த அதிகாரப்போட்டியில் யார் கூடுதலாக தமிழ் மக்களை நசுக்குவார்களோ அவர்களே சிங்கள மக்களின் கூடுதலான வாக்கைக் கவரமுடியும் என்ற உத்தியை மாண்புமிகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையில் எடுத்துள்ளார். தான் உயிருடன் இருக்கும் வரை வடகிழக்கு இணைப்புக்கோ சமஷ்டித் தீர்வுக்கோ இடமளிக்கப்போவதில்லை என்று கூறியுள்ளார். அவரை வைவதால் ஆவது ஒன்றுமில்லை. அவருடன் சேர்ந்து பேசுவதாலும் எதுவும் ஆகப்போவதில்லை. சர்வதேசங்கள் தான் இதுபற்றி கவனஞ் செலுத்த வேண்டும்.

ஒரு நிகழ்ச்சிநிரல் இன்றி செயற்பட்டமையே இன்றைய எமது இந்த கையறு நிலைக்கு காரணமாகும். எது எவ்வாறெனினும், நடந்தவை நடந்து முடிந்துவிட்டன. இனிமேலாவது, கட்சி நலன்களைப் புறந் தள்ளிவிட்டு கொள்கை அடிப்படையில் நிகழ்ச்சி நிரல் ஒன்றுக்கு அமைவாக நிறுவனப்பட்ட செயற்பாட்டை நாம் முன்னெடுக்கவேண்டும். அதாவது இருட்டில் கையாட்டிப் பார்க்காமல் பாதை தெரிந்து பயணிக்க வேண்டும்.

இன முரண்பாட்டுக்கான தீர்வு தொடர்பில் சிங்கள ஆட்சியாளர்களின் மனோநிலையை உலக்கு எடுத்தியம்ப வேண்டும். ஒற்றையாட்சி அடிப்படையிலான இலங்கை அரசமைப்புக்குள் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கட்டமைப்பு சார் தடைகளை சர்வதேச சமூகம் இனிமேலாவது புரிந்துகொள்ள வழி வகுக்க வேண்டும். தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதிக்குச் சமன் என்பதைப் புரிந்து கொண்டு இனிமேலும் காலம் தாழ்த்தாது தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வழி வகுக்க வேண்டும். சர்வதேச சமூகம் தற்போது தமிழர் பிரச்சினைகளைச் சார்பாகப் பார்க்க வேண்டிய காலம் கிட்டியுள்ளது. நாம் எமது கடமைகளைச் சரியாக ஆற்ற முன் வர வேண்டும்.

இது சம்பந்தமாக எதிர்வரும் ஜெனிவா மனித உரிமைகள் சபை கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் ஒரு சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கான பொறிமுறை ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவை முன்வைக்குமாறு உறுப்புநாடுகளையும் ஏனைய நாடுகளையும் எம் மக்கள் சார்பில் வேண்டிக் கொள்கின்றேன்.

இலங்கையில் எவர் ஆட்சியில் உள்ளார்கள் என்று பார்த்து செயற்படாது பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள 'இலங்கை அரசு' என்ற ரீதியில் போர்க்குற்ற விசாரணைக்கான நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் மேற்கொள்ள வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக வேண்டிக் கொள்கின்றேன். இதன் ஊடாகவே எமது சிங்கள சகோதரர்களுக்கு இறுதி யுத்தத்தில் என்ன நடைபெற்றது, எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள், எத்தனை பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்பன போன்ற உண்மைகளை எடுத்துச் சொல்ல முடிவதுடன் அதனால் புரிந்துணர்வை ஏற்படுத்தி உண்மையான இன நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியும். இல்லாது விட்டால் குற்றம் இழைத்தவர்கள் தம்மைப் பாதுகாப்பதற்காக போலித் தேசியவாதத்தைக் கையில் எடுத்து இன முரண்பாட்டை மேலும் சிக்கல் நிலைக்கு உட் படுத்துவதற்கே இன்றைய நிலைமைகள் வழிவகுக்கும். எமது மக்கள் தலைவர்கள் விரைந்து செயற் படுவார்களா? – என்றுள்ளது.

# தொல்பொருள் திணைக்களத்தின் அடாவடிச் செயலினால் பதற்றம்!

## வவுனியாவில் ஆலய வளாகத்தில் விகாரை அமைக்க முயற்சி





வவுனியா, நவ. 07

வவுனியா – சமணங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் அத்துமீறிய செயற்பாட்டால் மக்கள் பதற்றமடைந்துள்ளனர்.

சமணங்குளம் கல்லுமலை விநாயகர் ஆலயம் கடந்த 1952ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமைக்கப்பட்டு மக்களால் பூசை வழிபாடுகள் இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாலயம் அமைந்துள்ள மலையில் தொல்பொருள் சின்னங்களான பண்டைய கற் தூண்கள், பாழடைந்த செங்கல் படிவங்கள், கட்டடங்கள் எனப் பல காணப்படுகின்றன.

இந்நிலையில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் தொல்பொருள் திணைக்களத்தால் கல், மணல் மற்றும் பல கட்டடப் பொருட்கள் இவ்வளாகத்துக்கு கொண்டு வரப்பட்டிருந்த நிலையில், நேற்று அங்கு விகாரையொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தமையால் பிரதேச மக்கள் அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனால் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பிரதேசவாசி ஒருவர் கூறுகையில், இவ்வாலயத்தை பரம்பரை பரம்பரையாக நாம் வழிபட்டு வருகின்றோம். ஆனால் தற்போது இவ்வாலயம் தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமெனக் கூறி புத்தர் சிலையை அமைக்க முயல்கின்றனர் எனக் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை தவிசாளர் து.நடராஜசிங்கம், முன்னாள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், நகரசபை உறுப்பினர் சந்திரகுலசிங்கம் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று இவ்விடயம் தொடர்பாக அப்பிரதேச மக்களுடன் கலந்துரையாடியமையுடன் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளுடன் தொலைபேசியில் கலந்துரையாடலொன்றிலும் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு இவ்விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டதையடுத்து, அவ்விடத்துக்கு வருகை தந்த பொலிஸார், ஆலயப் பரிபாலன சபையினர் மற்றும் தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோரிடம் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தொல்பொருள் திணைக்களப் பிராந்திய முகாமையாளர் இவ்விடயம் தொடர்பாக தெரிவிக்கையில் –

அந்த இடத்தில் அனுராதபுரக் காலத்தின் புராதனச் சின்னங்கள் உள்ளன. அவைகளை அழியாமல் தடுப்பதற்கு புனரமைக்கும் செயற்பாட்டை மேற்கொள்வதாகக் கூறினார். (ஐ)

# ஆட்டோமீது சரிந்து விழுந்தது கற்பாறை

## இருவர் உயிரிழப்பு! மூவர் படுகாயம் உடபுஸல்லாவையில் பெரும் சோகம்



உடபுஸ்ஸலாவ கொட்டம்பே பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தமையுடன், மேலும் மூன்று பேர் படுங்காயமடைந்து உடபுஸ்ஸலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இராகலையிலிருந்து கொட்டம்பே பகுதிக்குச் சென்று அங்கிருந்து, உள் வீதியினூடாக கல்கொட்டுவ கருடாகல நோக்கிச் செல்லும் வேளையில், ஓட்டோ மீது மரத்துடன் கூடிய கற்பாறைகள் சரிந்து வீழ்ந்ததில் அதில் பயணித்த 5 பேர் படுங்காயங்களுடன் உடபுஸ்ஸலாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இதில் இரண்டு பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உடபுஸ்ஸலாவ மஸ்பன்ன பகுதியை சேர்ந்த 40 வயதுடைய நிஷாந்த ஜெயக்கொடி மற்றும் 28 வயதுடைய சுசில் குமார ஜெயக்கொடி என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சடலங்களை பிரேத பரிசோதனைக்காக உடபுஸ்ஸலாவ வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, மரண விசாரணைகளின் பின் அவை உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை உடபுஸ்ஸலாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மஹிந்தவைத் தமிழ் மக்களிடம் கடவுள் மண்டியிட வைத்துள்ளார்

## கூறுகிறார் சாந்தி சிறிஸ்கந்தராஜா எ.பி.

மஹிந்த ராஜபக்ஷவைத் தமிழ் மக்களிடம் இறைவன் மண்டியிட வைத்துள்ளான் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைதொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை நசிக்கியது மட்டுமல்லாது பல்லாயிரக்கணக்கான தமிழர்களை முள்ளிவாய்க்கால் வரை கொண்டு சென்று கொத்துக்கொத்தாகக் கொன்று குவித்து விட்டு இன்று அதே தமிழ் மக்களிடம் வந்துதான் ஆட்சியில் இருப்பதற்காக மண்டியிடுகின்றார் முன்னாள் ஜனாதிபதி.

இன்று இலங்கையில் யார் ஆட்சியில் இருக்கவேண்டுமென்ற தீர்மானத்தை எடுக்கின்ற சக்தியைத் தமிழ் மக்கள், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் மஹிந்த அமைச்சுப் பதவி வழங்குவதாகவும் கோடிக் கணக்கில் பணம் வழங்குவதாகவும் பேரம் பேசி வருகின்றார்.

இந்த மண்ணின் விடுதலைக்காகத் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களினதும் மக்களினதும் உயிர்களுக்கு யாரும் விலை பேசமுடியாது. இதற்குப் பரிகாரமாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தை வழங்கவேண்டும்.

ஆனால் அவ்வாறு தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வை வழங்குவதற்கு மஹிந்த ராஜபக்ஷ தயாராக இல்லை. தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை விலை பேசுகின்றார்.

தமிழ் மக்களினுடைய இழப்புக்களை ஈடு செய்வதற்கு எவராலும் எந்தவிலையும் பேசமுடியாது.

மாறாக தமிழ் மக்களுக்களின் அபிலாகைகளை நிறைவேற்றக் கூடிய ஒரு நிரந்தரமான தீர்வைப் பெற்றுத்தரக்கூடிய வகையில் அரசமைப்பை அமுல் படுத்த வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையிலே ஏற்படுத்தப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றவேண்டும்.

இதுவே அவர் தமிழ் மக்களுக்குச் செய்யும் பரிகாரமாக அமையும். அதைவிடுத்து, மஹிந்த தொடர்ந்தும் தமிழ் மக்களை எமாற்றுகின்ற வகையிலேயே தொடர்ந்து செயற்பட்டு வருகின்றார் – என்றார். (ஐ)

# ரணிலின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்துமாறு வலியுறுத்தல்

கொழும்பு, நவ. 07

பிரதமர் ஒருவருக்கு வழங்கப்படும் பாதுகாப்பே ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்படவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி பொலிஸ்மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பிலான கடிதமொன்றைப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத்தில் கையளித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்றுச் செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாங்கள் பொலிஸ் தலைமை அலுவலகத்துக்குச் சென்றவேளை அங்கு பொலிஸ்மா அதிபரோ வேறு எந்த சிரேஷ்ட அதிகாரியோ இருக்கவில்லை.

இதன்காரணமாக அங்கு காணப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரிடம் கடிதத்தைக் கையளித்துவிட்டு பொலிஸ்மா அதிபரை தொலைபேசியில் தொடர்புகொண்டு தெரிவித்தோம்.

சபாநாயகர், ரணில் விக்கிரமசிங்கவையே பிரதமராக ஏற்றுக்கொண்டுள்ளார். இதன் காரணமாகப் பிரதமருக்கு வழங்கப்படும் பாதுகாப்பை அவருக்கு வழங்குமாறு பொலிஸ்மா அதிபரைக் கேட்டுக்கொண்டுள்ளோம் – என்றார். (ஐ)

# இலங்கை நிலை மிக மோசமானது

## ஐ.நா இராஜதந்திரி கவலை

கடந்த கால யுத்த நிலைமையை விட தற்போதைய நிலைமை மிக மோசமானது என அல்ஜீரியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஐ.நா இராஜதந்திரியுமான லக்தர் பிரஹிமி தெரிவித்துள்ளார். நெல்சன் மண்டேலாவினால் நிறுவப்பட்ட சமாதானம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் செயற்படும் 'த எல்டர்ஸ்' அமைப்பினூடாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில், 'இலங்கையின் முப்பது வருடகால யுத்த நிலைமைகளின்போது கூட தற்போதுள்ள நிலையைப் போன்றதொரு மோசமான அரசமைப்பு நெருக்கடி எதிர்கொண்டிருக்கவில்லை.

நாட்டின் தலைவர்கள் அரசமைப்புச் சட்டத்தின் மாண்புகளைப் பாதுகாப்பதுடன், நாடாளுமன்றத்தின் ஜனநாயகத் தன்மையையும் உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட வேண்டும். அத்தோடு அரசியல் தலைவர்களின் செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை, நியாயத்துவம் என்பன காணப்படவேண்டும் என்பதுடன், மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் செயற்பட வேண்டும் – என்றுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பொதுத் தேர்தலுக்கு வாய்ப்பில்லை

தென்னிலங்கை அரசியலின் போக்குத் தொடர்பாகத் தினசரி வெளியாகும் செய்திகளைப் பார்க்கும் போது சிறு வயதில் விளையாடிய 'ஏணியும் பாம்பும்' விளையாட்டுதான் நினைவுக்கு வருகின்றது.

நிலையான ஆட்சியை அமைப்பதற்கான நாடாளு மன்ற ஆசனங்களின் எண்ணிக்கையான 113 என்ற அட்சரகணித இலக்கை எட்டுவதற்காகக் கட்சிகள் நடத்தும் திருகுதாளங்கள் அப்படித்தான் இருக்கின்றன. ஒரு நாளைக்கு ஒருதரப்பிலிருந்து இருவர் விலக, அதே சமயம் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்து புதிதாக ஒருவர் இணைய என்று ஏணியில் ஏறுவதும், பாம்பில் சறுக்குவதுமாக இந்த எண்ணிக்கை விளையாட்டு இழுபடுகின்றது.

நாடாளுமன்றத்தில் தமது அரசுக்குப் பெரும்பான்மை யைக் காட்டும் முயற்சியில் புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தோற்றுப் போனால் அடுத்து என்ன நடக்கும் என்பது குறித்து நாட்டில் பலவிதமாகப் பேசப்படுகின்றது.

நிதி அமைச்சர் என்ற முறையில் தாம் சமர்ப்பிக்கப் போகும் வரவு செலவுத்திட்டத்தை – அல்லது இடைக்கால நிதி ஒதுக்கீட்டுப் பிரேரணையை – நாடாளுமன்றத்தில் தோல்வியடைய இடமளித்து, அதன் மூலம் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு வழி செய்வதே மஹிந்த ராஜபக்ஷவின் திட்டம் என்றும் ஒரு சாரார் கருத்துக் கூறுகின்றனர். புதிய பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதன் மூலம் தனது செல்வாக்கை சட்டரீதியாக உறுதிப்படுத்தி, தன்னைப் பலப்படுத்திக் கொள்வதே மஹிந்த ராஜபக்ஷவின் திட்ட மாக – விருப்பமாக – எதிர்பார்ப்பாக – இருக்கலாம்.

ஆனால், அது இலகுவில் சாத்தியப்படக் கூடியதல்ல என்பதே உண்மையாகும்; யதார்த்தமாகும்.

அரசமைப்புக்கு கொண்டு வரப்பட்ட 19ஆவது திருத்தத் தின் கீழ் நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைத்து தேர்தல் நடத்துவது என்பது பெரும்பாலும் சாத்தியப்பாடு குறைவானது என்பதே நிலைமையாகும்.

நாடாளுமன்றத்தில் நிதிச் சட்டத்திலோ அல்லது அது போன்ற முக்கிய விடயங்களிலோ அரசு தோற்றால் அந்த பிரதமரின் கீழான அரசு கவிழும். அது சரிதான் ஆனால், அதற்காகப் பொதுத் தேர்தல் வரும் என்று கூறிவிட முடியாது.

இப்போதும் கூட, மஹிந்தரின் அரசு நாடாளுமன்றத் தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையில், தோற்றுப் போனாலோ –

அல்லது அதன் வரவு – செலவுத்திட்டம் போன்ற நிதிப் பிரேரணை நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டாலோ –

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசு கவிழும். ஆனால் அதன் அர்த்தம், உடனடியாகப் புதிய பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என்பதல்ல.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு கவிழ்ந் தால், நாடாளுமன்றத்தில் புதிய அரசு ஒன்றை அமைக் கக்கூடிய பெரும்பான்மைப்பலம் வைத்திருப்பவர் என்று தாம் கருதும் இன்னொருவரைப் புதிய பிரதமராக நியமித்து, அவரை ஆட்சியை அமைக்கும்படி ஜனாதிபதி கோரலாம். அதுதான் நடக்கும்.

அரசமைப்புக்குக் கடைசியாகக் கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்தத்தின்படி நாடாளுமன்றம் ஒன்றின் பதவிக் காலம் நான்கரை ஆண்டுகள் (54 மாதங்கள்) முடிவடைய முன்னர் அந்த நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கவே முடியாது.

வேண்டும் என்றால், நாடாளுமன்றம் தானாகவே ஒரு தீர்மானத்தை – அதுவும் மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மை யுடன் – நிறைவேற்றி, இந்தத் தீர்மானம் மூலம் நாடாளுமன்றத்தைக் கலைக்கக் கோரினாலன்றி, நாடாளுமன்றத்தை அதன் 54 மாத பதவிக்காலம் முடி வடைய முன்னர் ஜனாதிபதியால் கலைக்கவே இயலாது.

அதன்படி பார்த்தால், தற்போதைய நாடாளுமன்றத் தின் 54 மாத பதவிக்காலம் 2020 பெப்ரவரியில் தான்முடி யும். அதற்குப் பின்னர்தான் இந்த நாடாளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்க முடியும்.

அப்படி இந்த நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதி காரம் 2020 பெப்ரவரி முடிவில் ஜனாதிபதி பதவியில் இருப்பவருக்கு வரும் என்றாலும், அச்சமயம் இப்பதவியில் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருப்பாரா என்பதும் கேள்விக் குறியே. ஏனென்றால் அதற்கு முன்னர் அவரின் தற்போதைய பதவிக்காலம் முடிவடைந்து விடும். 2019 நவம்பர் அளவில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலும் நடந்து முடிந்திருக்கும். அப்போது தெரிவாகும் ஜனாதிபதி யால்தான் இந்த நாடாளுமன்றத்தை கலைக்க முடியும்.

அதற்கு முன்னர், தற்போதைய நாடாளுமன்றம் தானா கவே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, நாடாளுமன்றத்தைக் கலைக்க வைத்து, புதிய பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்வதானாலும் அதற்கும் அத்தகைய தீர்மானத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர் களின் – 150 இற்கும் குறையாத எம்.பிக்களின் – ஆதரவு தேவை. அதுவும் சாத்தியப்பாடற்றது என்பதே நிலைவர மாகும்.

# 622 ஆவது நாளாகத் தொடரும் போராட்டம் தீபாவளித் தினத்தில் கண்ணீருடன் உறவுகள்

வவுனியா, நவ. 07

யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் தமிழர் தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவு கள் 622ஆவது நாளாகவும் வவுனியாவில் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்தனர்.

தீபாவளி நாளான நேற்றுச் செவ்வாய்க்கிழமை யும் இந்த மக்கள் தமது உறவினர்களுக்காகக் கண்ணீருடன் மழைக்கு மத்தியில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த தீபாவளிக்கு முன் தமது பிள்ளைகளுக் கான தீர்வு கிடைக்குமெனத் தமிழ் அரசியல் தலைமைகள் தெரிவித்தபோதிலும் இதுவரை எவ்வித தீர்வும் எட்டப்படவில்லையென உற வினர்கள் கண்ணீருடன் தெரிவித்தனர்.

யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்களாகின்ற போதும் தமது துயர் துடைப்பார் யாருமில்லை யென இந்த மக்கள் வருத்தத்துடன் கூறினர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பில் எவ்வித பதிலும் வழங்கப்படாத நிலை யில், அவர்களுக்கு என்ன நேர்ந்ததென அரசு




தெரிவிக்க வேண்டுமென வலியுறுத்தி இந்த மக் கள் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும், தமது உறவுகள் குறித்து கவனஞ்செலுத்தப்படுவதில் லையெனத் தெரிவிக்கும் இவர்கள், தமது நிலையுணர்ந்து மனிதாபிமான ரீதியில் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள் ளனர். (ஐ)

# ஜனாதிபதி அழைத்தமையால் அவரைச் சென்று சந்தித்தேன்



### ராஜித சேனாரத்ன கூறுகிறார்

கொழும்பு, நவ. 07

ஜனாதிபதி விடுத்த அழைப்பின் பேரில் அவரை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்தார் என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செய்தியொன்றை ரணில் விக் கிரமசிங்கவுக்குத் தெரிவித்தார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அவரைச் சந்தித்தேன். நான் தனியாகச் செல்ல விரும்பாத தால் ஜோன் அமரதுங்கவை அழைத்துச் சென் றேன். ஜனாதிபதி தான் ஏன் மஹிந்த ராஜபக்ஷ வைப் பிரதமராக நியமிப்பதற்குத் தீர்மானித்தார் என்பதை எனக்குத் தெளிவுபடுத்தினார், சிறிசேன வின் நடவடிக்கைகள் நாட்டுக்கு எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்பதை நான் அவருக்குத் தெரிவித்தேன். இதன் பின்னர் நான் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து இந்தச் சந்திப்பு குறித்த விடயங்களைத் தெரிவித்தேன். ஜனாதி பதியுடனான எனது சந்திப்பு நாட்டைப் பொறுத்த வரை சாதகமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஜனாதிபதியுடனான எனது சந்திப்பு சாதகமானதாக அமைந்தது. எனினும் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் எப்படி நடைமுறைப்படுத்தப்படுகின் றன என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண் டும். எனது சந்திப்பு கட்சி தாவலுடன் தொடர்பற்றது – என்றார். (ஐ)

# பிரிட்டன் ஆயுதப் படைகளில் இலங்கையர்களுக்கு வாய்ப்பு

பிரிட்டனில் வசிக்காத இலங்கையர்களும்கூட பிரிட்டன் ஆயுதப் படைகளில் இணைந்து கொள்ள முடியும் என்று அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சு நேற்று முன் தினம் அறிவித்துள்ளது.

இந்தியா, இலங்கை, ஆஸ்திரேலியா, கென்யா, பிஜி, உள்ளிட்ட பொதுநலவாய நாடுகளைச் சேர்ந் தவர்கள் – பிரிட்டனில் வசிக்காத போதும், பிரிட்டன் ஆயுதப் படைகளில் இணைந்து கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்தவர்களை பிரிட்டன் ஆயுதப்படைகளில் சேர்த்துக் கொள் வதற்கான விதிமுறைகளைத் தளர்த்தும் இந்த முடிவு நேற்று முன் தினம் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனின் இராணுவம், கடற்படை, விமா னப்படை ஆகியவற்றில் இணைந்து கொள்வதற்கு, குறைந்தது ஐந்து ஆண்டுகள் அங்கு வசித்திருக்க வேண்டும் என்ற – 1998ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட விதிமுறையை தளர்த்துமாறு, அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சு, நாடாளுமன்றத்திடம் யோசனையை முன்வைத்துள்ளது.

பிரிட்டன் கடற்படை, விமானப்படை, இராணுவம் ஆகியவற்றுக்கு பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 350 பேரைச் சேர்த்துக் கொள்வதற்காக, 5 ஆண்டுகள் பிட்டனில் வசித்திருக்க வேண்டும் என்ற விதிமுறையை தளர்த்த முடிவு செய்திருக்கி றோம் என்று பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அனைத்துப் பொதுநலவாய நாடுகளில் இருந் தும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வோம், 18 வயதுக்கு உட்பட்டவர்களிடம் இருந்து விண்ணப் பங்கள் ஏற்கப்படாது.

பிரிட்டன் ஆயுதப்படைகளில் தற்போது 8 ஆயிரத்து 200 வெற்றிடங்கள் உள்ளன. அதனை நிரப்புவதில் சிக்கல்கள் உள்ள நிலையிலேயே பொதுநலவாய நாடுகளைச் சேர்ந்தவர்களை தமது படைகளில் அதிகளவில் சேர்த்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரிட்டன் ஆயுதப்படைகளில் தற்போது 4 ஆயிரத்து 500 பொதுநலவாய நாட்டவர்கள் பணியாற்றுகின்றனர். 3 ஆயிரத்து 940 பேர் பிரிட்டன் இராணுவத்திலும், 480 பேர் றோயல் கடற்படையிலும், 80 பேர் விமானப்படையிலும் உள்ளனர்.

**வட மாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை – 2018**

"ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்."

- கரோலஸ் லினேயஸ் (தாவர வகைப்பாட்டியலாளர்)

**நாளை**

08.11.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம்: விசாகம் மு.இ. 9.11 வரை
திதி : பிரதமை மு.இ. 10.06 வரை
சுபநேரம் : 7.35 – 9.05 வரை
இராகுகாலம் : 1.35 – 3.05 வரை

# தமிழரசுக் கட்சியிலிருந்து சுமந்திரனை நீக்குங்கள்

## மாவைக்கு மறவன்புலவு சச்சி கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 07

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் , தமிழரசுக் கட்சியின் உப செயலாளருமான எம். ஏ. சுமந்திரனை கட்சியில் இருந்து நீக்குமாறு தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு சிவசேனா அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் கடிதம் அனுப்பியுள்ளார்.

வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் இளைஞரணி மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் உரையாற்றும் போது ஜனாதிபதியை 'நீ' என விளித்து ஒருமையில் உரையாற்றி இருந்தார்.

அந்நிலையில் சுமந்திரன் அவ்வாறு ஒருமையில் ஜனாதிபதியை விளித்து உரையாற்றியமையை ஏற்க முடியாது எனவும், அதனால் அவரைத் தமிழரசு கட்சியில் இருந்து நீக்குமாறும் கோரி நேற்று திகதியிடப்பட்ட (06ஆம் திகதி) கடிதம் ஒன்றை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு மறவன் புலவு சச்சிதானந்தன் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:

நீ என்ற உச்சரிப்பின் தொனிதான் சிக்கலானதாக உள்ளது. இக்காலத்தில் நீ, உன்னை, வாடா, வாடி போன்ற சொற்களைக் கணவனும் மனைவியும் பரிமாறும் சிற்றின்ப நேரங்களையோ, கடவுளும் அடியவனும் பரிமாறும் பேரின்ப நேரங்களையோ அறியாதவல்லர் தமிழர்.

தமிழர் சார்பாளர் ஒருவர் சினந்து வெறுப்பைச் சிந்தியவாறு, சிங்களத் தலைமைச் சார்பாளரை நீ என விளித்தல் தமிழரின் மரபல்ல. முதிர்ச்சியற்ற வெறுப்பைத் தூண்டும் பேச்சு. ஆற்றாமையின் உச்ச வெளிப்பாடு. தமிழரின் அறிவார்ந்த அணுகுமுறைக்கு ஊனமானது.

சினம் என்னும் சேர்ந்தரைக் கொல்லி என்ற குறள் வரி தெரிந்தவர் இவ்வாறு பேசார். சம்பந்தன் முன்பும் ஆஸ்திரேலியப் பேச்சுக்காக சுமந்திரனைக் கண்டித்தவர். இப்பொழுதும் அவர் இத்தகைய உரையை ஏற்கார்.

1960 இன் இரண்டாவது தேர்தலில் 1971 தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சிலரின் இவ்வாறான பெறுப்பற்ற உரையால் சிங்கள மக்கள் தமக்குத் தாமே தமிழர் ஆதரவு இல்லாமல் ஆட்சி அமைத்தார்கள். சிங்கள மக்களை ஒன்றிணைத்துத் தமிழர் ஆதரவில்லாத ஆட்சியை 2018 க்குப் பின் வரும் தேர்தலில் சிங்களவர் தேர்வார்கள், 1960இல் வந்த ஆட்சி, 1971இல் வந்த ஆட்சி இரண்டுமே தமிழரைத் திட்டமிட்டு நசுக்கிய ஆட்சிகள்.

2018 க்குப் பின்னரும் தமிழரை நசுக்கும் ஆட்சியைத் தேர்ந்தெடுக்கச் சிங்களவரைத் தூண்டிய சுமந்திரனை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும் விடுவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1961இல் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் தமிழகத் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு கேட்ட நாள் முதலாக இன்றுவரை, ஈழத் தமிழர் நலம் காக்க எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி, எந்தவிதப் பதவி ஆசையும் இன்றி, கட்சியின் அடிமட்டத் தொண்டனாகப் பணிபுரிந்து வருகிறேன். 1977இல் கட்சியின் நடுவண் குழுவுக்குத் அமிர்தலிங்கம் என்னைப் பணியமர்த்தினார். தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுச் செயலாளராக்கினார்.

1989இல் உங்களை நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்த கொழும்பில் நடந்த நடுவண் குழுக் கூட்டத்திலும் இருந்தேன். பின்னர் தமிழகத்திலும் டில்லியிலும் உங்களோடு கட்சிக்காக நான் உழைத்தமையை நீங்கள் நன்கு அறிவீர்கள். கடந்த வாரம் சர்வதேசத்தைக் கலந்தே ஆதரவு யாருக்கு எனத் தீர்மானிப்போம் என்ற உங்கள் அறிவார்ந்த அறிக்கையை ஆதரித்து வெளிப்படையாகக் கருத்துக் கூறியிருந்தேன்.

2015இல் வவுனியாப் பொதுக்கூட்டத்தில் கட்சியின் நடுவண்குழு உறுப்பினனானேன். தயைகூர்ந்து நடுவண் குழுவைக் கூட்டி சுமந்திரனைக் கட்சியின் அனைத்துப் பொறுப்புகளில் இருந்தும்

# 2 வைத்தியசாலைகளுக்கு பணிப்பாளர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 07

கிளிநொச்சி மற்றும் சாவகச்சேரி வைத்தியசாலைகளுக்குப் புதிய பணிப்பாளர்கள் மத்திய சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி தள வைத்தியசாலைக்கு நீண்டகாலமாக தகுதி வாய்ந்த பணிப்பாளர்கள் இல்லாமல் இருந்த குறைபாட்டை நீக்கும் வகையில் மருத்துவ நிர்வாக முதுமாணிப் பயிற்சியைப் பெற்றுக்கொண்ட வைத்திய கலாநிதி .த. மஹேந்திரன் மத்தியசுகாதார அமைச்சினால் உடனடியாக செயற்படும் வண்ணம் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மருத்துவ நிர்வாக முதுமாணிப் பயிற்சியைப் பெற்றுக்கொண்ட வைத்திய கலாநிதி தங்கராஜா காண்டீபன் நியமிக்கப்பட்டுள்ளார்

நாட்டில் உள்ள 17 வைத்தியசாலைகளுக்கான மருத்துவ நிர்வாகத்துறை நியமனங்கள் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன. இவர்கள் அனைவரும் தத்தமது பணியிடங்களில் இன்று 7ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வமாகக் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# நாடாளுமன்றில் ஆசனங்கள் ஒதுக்குவதில் பெரும் சிக்கல்

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களுக்கு ஆசனங்களை ஒதுக்குவது குறித்து, இதுவரை இறுதித் தீர்மானத்துக்கு வரவில்லையென, நாடாளுமன்றப் பிரதிப் பொதுச் செயலாளர் நீல் இத்தவெல தெரிவித்தார்.


மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பதவியேற்ற பின்னர், இடம்பெற்று பல புதிய அமைச்சர்கள் பதவியேற்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பத்திரம் இதுரை நாடாளுமன்றத்துக்குக் கிடைக்கவில்லையென்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் நாள்களிலும் மேலும் பலர் அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்துக்கொள்ளவுள்ள நிலையில், உறுப்பினர்கள் ஆளுங்கட்சி அல்லது எதிர்க்கட்சியுடன் இணையும் சந்தர்ப்பம் உள்ளதால், நாடாளுமன்றத்தில் ஆசனங்களை ஒதுக்க முடியாதுள்ளதாகவும் நீல் இத்தவெல குறிப்பிட்டார்.

இதேவேளை, எதிர்வரும் 14ஆம் திகதி காலை 10 மணிக்கு நாடாளுமன்றம் கூட்டப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ள நிலையில், 13ஆம் திகதியளவிலேயே ஆசனங்கள் ஒதுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், தற்போதைய சபாநாயகரை நீக்க வேண்டுமெனில் அவருக்கெதிரா நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவேண்டுமென வும் இத்தவெல சுட்டிக்காட்டினார். (ஐ)

## வடக்கு – கிழக்கில் கன மழை!




வடக்கு – கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் கன மழை மற்றும் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. அதன் படி வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா, சப்ரகமுவ, வட மேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் 150 மில்லிமீற்றர் அளவில் மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மேலும் வேறு மாகாணங்களில் 100 மில்லிமீற்றர் அளவில் மழை பெய்யும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. அத்துடன் பலத்த காற்றில் இருந்து மக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யானை தாக்கி விவசாயி சாவு

பொத்துவில், தகராம்பளைப் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார். நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பொத்துவில் – 7, நூறானிய்யா வீதியைச் சேர்ந்த அலியார் அபூசாலி (வயது–56) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் உடல் பிரேத பரிசோதனைக்காக பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சம்பவம் தொடர்பாகப் பொத்துவில் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் தடுப்பு வேலிகள் முறையாகப் போடப்பட்டு காணப்படாதமையால், காட்டு யானைகள் மக்கள் வாழும் பகுதிகளுக்கு வரும் நிலைமை அதிகரித்து உள்ளது. இதனால் அப்பகுதியில் வாழும் மக் கள் மிகவும் அச்சத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)


# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் – 14, அத்தியடி ஒழுங்கை ஆதன இல. 57 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக்கொண்ட ஆதனம் வல்லிபுரம் பெண் ராசம்மா என்னும் ஆதன வரிப்பதிவேட்டில் காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை காங்கேசன்துறையைச் சேர்ந்த பொன்னையா சோமசுந்தரமும் பெண் இராஜேஸ்வரியும் பிரசித்த நொத்தாரிசு வே. சதாசிவம் முகதாவில் 1980.12.12 திகதி இட்டு 12400ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட சீதன உறுதியில் இவ்வாதனம் பிரசித்த நொத்தாரிசு சி.கா. ஆபிரகாம் முகதாவில் 1916.02.04 ஆம் திகதியிட்டு 8260 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதிப்படி தங்களின் 1ஆம் பேரின் மாதாவினதும் பெரிய மாதாவினதும் சொந்தமும் ஆட்சியமாகும் என்றும், அவர்கள் விருப்பாவணமின்றி இறக்க தமத முதுசமும் ஆட்சியுமானதென வெளிப்படுத்தி அருணாச்சலம் தெட்சணாமூர்த்தி பெண் சுந்தரேஸ்வரிக்கு சீதனமாக வழங்கியுள்ளனர். பொன்னையா சோமசுந்தரமும் பெண் இராஜேஸ்வரியும் பிரசித்த நெத்தாரிசு க. திருநாவுக்கரசு முகதாவில் 1988.05.20 ஆம் திகதியிட்டு 226 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றிய சீதன உறுதி மூலம் குறித்த ஆதனம் பிரசித்த நெத்தாரிசு சி.கா. ஆபிரகாம் முகதாவில் 1916.02.04 ஆம் திகதியிட்டு 8260 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்படுத்திய நன்கொடை உறுதிப்படிவங்களின் 1 ஆம் பேரின் மாதவினதும், பெரிய மாதாவினதும் சொந்தமும் ஆட்சியுமாகும். என்றும் அவர்கள் விருப்பாவண மின்றி இறக்க தனது முதுசமும் ஆட்சியுமுடையதும் என்று வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நெத்தாரிசு இரட்ணம் இரகுராஜ் முகதாவில் 2017.10.02 ஆம் திகதியிட்டு 8999 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் 1634 Dewberry Crecent, Mississauga, ontariyio, L4W கனடாவைச் சேர்ந்த அருணாச்சலம் தெட்சணாமூர்த்தியும் பெண் சுந்தரேஸ்வரியும் இல, 24 Blok, Government Flats, Bambalapitiya Colombo - 04 சேர்ந்த தம்பி ஜயா கந்தசாமியும் பெண் சுந்தராணியும் சுந்தரலிங்கம் சுதர்சனுக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

அதன் விவரம் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு இறை "காட்டு வளவு" நில. பர. 2.5 உம் "காட்டுவளவு" நில. பர. 3 குளி 0 இவை இரண்டும் சேர்த்து நில. பர. 5.5 ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் T.தங்கராஜா அவர்களின் வரைபட இலக்கம் 9644/2017.09.03 இல் துண்டு – 1 எனக் காட்டப்பட்ட நில. பர. 3 குளி 15.64 ஆகும்.

வடக்கு :– ஒழுங்கையும், பாக்கியராஜன் காயத்திரியின் ஆதனம்
கிழக்கு :– அத்தியடி ஒழுங்கை
தெற்கு :– ஒழுங்கை
கிழக்கு :– ஒழுங்கை

தற்போது இவ்வாதனத்தை சுந்தரலிங்கம் சுதர்சன் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்ததுள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமான சுந்தரலிங்கம் சுதர்சன் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதானப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**இம்மானுவல் ஆனல்ட்**
**முதல்வர்**
**மாநகரசபை**

# கர்நாடகா இடைத் தேர்தலில் காங். கூட்டணி முன்னிலை

புதுடில்லி, நவ. 07


கர்நாடக மக்களவை இடைத்தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி 4 இடங்களைக் கைப்பற்றி முன்னிலை வகித்துள்ளது. இந்நிலையில் பா.ஜ.க. 1 இடத்தை மாத்திரமே கைப்பற்றியுள்ளது.

பெல்லாரி, ஷிமோகா, மாண்டியா ஆகிய 3 மக்களவை தொகுதிகள் மற்றும் ராம்நகர், ஜமகண்டி ஆகிய 2 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நடந்த இடைத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நடவடிக்கை நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டு தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் காங்கிரஸ் கட்சியானது ஜமகண்டி மற்றும் பெல்லாரி ஆகிய 2 தொகுதிகளிலும் மதசார்பற்ற ஜனதாதள கட்சி ராம்நகர் மற்றும் மாண்டியா ஆகிய 2 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன. பாரதீய ஜனதா ஷிமோகா தொகுதியில் மாத்திரம் முன்னிலை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கர்நாடகாவில் நடைபெற்ற ஐந்து தொகுதிகளுக்காக இடைத்தேர்தலில், பதிவான வாக்குகளை எண்ணும் நடவடிக்கை நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இந்திய தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த வாக்குகள் எண்ணும் நடவடிக்கை நேற்றுக் காலை 8 மணி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பகல் வேளையளவில் வாக்கு எண்ணும் நடவடிக்கை நிறைவு பெற்று, வெற்றி நிலைவரம்



வெளியாகுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், வாக்கு எண்ணும் நடவடிக்கையை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கர்நாடகம் மாநிலத்தின் சிவமோகா, பெல்லாரி, மாண்டியா ஆகிய 3 நாடாளுமன்ற தொகுதிகள் மற்றும் ராமநகரம், ஜம்கண்டி ஆகிய 2 சட்டசபை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் கடந்த 2ஆம் திகதி நடைபெற்றது.

இந்தத் தேர்தலின் வாக்குப்பதிவு, அன்றைய தினம் காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை இடம்பெற்றது.

அந்தவகையில் ஐந்து தொகுதிகளிலும் மொத்தமாக 54,54,275 பேர் வாக்களித்திருந்தனர். அதில் பா.ஜ.க.வை எதிர்த்து காங்கிரஸ் – மதச்சார்பற்ற ஜனதா தளம் கூட்டணி அமைத்து போட்டியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆபிரிக்கப் பயணத்தை நிறைவு செய்து

# நாடு திரும்பினார் வெங்கையா நாயுடு



ஆபிரிக்க நாடுகளுக்கு 6 நாள் அரசு முறை சுற்றுப்பயணமாக சென்றிருந்த துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு நேற்றுச் செவ்வாய்க்கிழமை நாடு திரும்பியுள்ளார்.

துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு ஒக்ரோபர் 31ஆம் திகதி ஆபிரிக்க நாடுகளுக்கான தனது அரசு முறை சுற்றுப்பயணத்தை ஆரம்பித்தார். பயணத்தின் முதல் நாடாக போட்ஸ்வானாவுக்கு சென்றடைந்தார். அதன் பின்னர் சிம்பாப்வே, மலாவி போன்ற நாடுகளுக்கும் சென்றார்.

இந்தநிலையில் 6 நாள்கள் தனது அரசுமுறை சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றுக் காலை நாடு திரும்பினார்.

இந்தப் பயணம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த பயணம் மிகவும் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாகத் தெரிவித்துள்ளார்.

3 நாடுகளுடனான உறவு இந்தப் பயணத்தின் மூலம் மேம்பட்டதாகவும், அதன்மூலம் முழுமையான திருப்தி அடைந்ததாகவும் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சபரிமலையில் போராட்டம் செய்த 200 பேர் மீது பொலிஸார் வழக்கு!

புதுடில்லி, நவ. 07

சபரிமலையில் 50 வயது கடந்த பெண்ணுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட 200 பேர் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சபரிமலை ஐய்யப்பன் கோவிலுக்கு 10 முதல் 50 வயது வரையிலான பெண்கள் செல்லத் தடையிருந்து வந்த நிலையில், அங்கு அனைத்து வயதுப் பெண்களையும் அனுமதிக்கவேண்டும் என்று கடந்த செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதற்கு ஐயப்ப பக்தர்களும், இந்து அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் மற்றும் பாரதீய ஜனதாக் கட்சியினரும் எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், திருவாங்கூர் கடைசி மன்னர் சித்திர திருநாள் பலராம வர்மாவின் பிறந்த நாளைமுன்னிட்டு சிறப்பு பூஜைக்காக ஐயப்பன் கோவில் நடை நேற்று முன் தினம் திங்கள் கிழமை மாலை 5 மணிக்கு திறக்கப்பட்டது. 10 முதல் 50 வயது வரையிலான பெண்கள் யாரும் வராததால், அசம்பாவிதம் எதுவும் இன்றி நேற்று முன்தினம் கோவிலில் பூஜை அமைதியாக நடைபெற்றது.

மேலும் சபரிமலைக்கு 50 வயதுக்கு கீழ் உள்ள பெண் ஒருவர் தரிசனம் செய்ய வந்துள்ளார் என வதந்தி பரவியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பக்தர்கள் நேற்றுச் செவ்வாக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து பக்தர்களிடம் பொலிஸார் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். மேலும் தரிசனத்திற்கு வந்த பெண்ணிடமும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டபோது குறித்த பெண் 50 வயதைக் கடந்தவர் என தெரிய வந்தது.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து சபரிமலை தரிசனத்திற்கு வந்த பெண்ணுக்கு எதிராகப் போராட்டத்தை மேற்கொண்டவர்களை கண்டறியும் பணியில் பொலிஸார் ஈடுபட்டனர். இதற்காக சி.சி.ரி.வி. காணொலி பதிவுகளை ஆய்வு செய்து, இதில் 200 பேர் மீது பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குடும்பத்துக்கு 2 குழந்தைகள் திட்டம் மீதான மனு தள்ளுபடி

குடும்பத்துக்கு 2 குழந்தைகள் மட்டும் பெற்றுக்கொள்ளும் திட்டத்தை அமுல்படுத்த கோரிய மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. சமூக சேவகரும், தொண்டு நிறுவனமொன்றின் தேசிய ஒருங்கிணைப்பாளருமான அனுபம் பாஜ்பாய் உச்ச நீதிமன்றத்தில் இவ்விடயம் தொடர்பாக பொதுநல மனுவொன்றை நேற்று முன் தினம் திங்கட்கிழமை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

மக்கள் தொகை அபாயகரமாக உயர்ந்து வருவதால், வனவளம் அழிக்கப்பட்டு குடியிருப்புகள் உருவாக்கப்படுகின்றன.

மேலும் எரிபொருள் தேவை அதிகரித்துள்ளமையால் சுற்றுச்சூழல் சீர்கெடுகிறது. ஆகவே, 2 குழந்தைகள் மட்டும் பெற்றுக்கொள்பவர்களுக்கு சிறப்பு சலுகைகளை வழங்க வேண்டும். ஆனால் 2 குழந்தைகளுக்கு மேலாக பெறுபவர்களுக்கு அரசின் எந்த சலுகையும் வழங்கக்கூடாது.

அந்தவகையில் குடும்பத்துக்கு 2 குழந்தைகள் மட்டும் பெற்றுக்கொள்ளும் திட்டத்தை அமுல்படுத்த உத்தரவிட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தார். இதனைத் தொடர்ந்து மனுவை ஆராய்ந்த நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான அமர்வு, இந்த மனுவை விசாரணைக்கு ஏற்க முடியாதென கூறி மனுவை தள்ளுபடி செய்துள்ளது.

# குஜராத் தலைமைச் செயலகத்துக்குள் புகுந்த சிறுத்தையால் பெரும் பதற்றம்

குஜராத், நவ. 07

குஜராத் தலைமைச் செயலகத்துக்குள் புகுந்த சிறுத்தை மயக்க ஊசி செலுத்திப் பிடிக்கப்பட்டது.

குஜராத் அரசின் தலைமைச் செயலகம், தலைநகர் காந்தி நகரின் 10ஆவது செக்டார் பகுதியில் அமைந்துள்ளது. இங்கு மாநில சட்டசபை, முதலமைச்சர், தலைமைச் செயலாளர், மந்திரிகள் மற்றும் உயர் அதிகாரிகளின் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

தலைமைச் செயலகம் அமைந்துள்ள 50 சதுர கிலோ மீற்றர் சுற்றளவு பகுதியில் வனவிலங்குகள் நடமாட்டம் அதிகம் காணப்படும். இந்த வன விலங்குகள் அவ்வப்போது நகருக்குள் புகுந்து பீதியை ஏற்படுத்துவதும் உண்டு.

இதுபோன்ற சம்பவம் ஒன்று நேற்று நடந்தது. அதிகாலை 2 மணி அளவில் சிறுத்தை ஒன்று தலைமைச் செயலகத்தின் இரும்பு கேற்றுக்கு அடியில் உள்ள இடைவெளி வழியாக நுழைந்து உள்ளே புகுந்தது.

இந்தக் காட்சி அங்குள்ள கண்காணிப்பு கமராவில் பதிவாகி இருந்தது. இதைக்கண்ட கண்காணிப்பு



அறை பொலிஸார் மேலதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து உஷார்ப்படுத்தினர். இதையடுத்து தலைமைச் செயலகத்தின் நுழைவு மற்றும் வெளியேறும் வழிகள் அனைத்தும் அடைக்கப்பட்டன.

அங்கு உடனடியாக 350 இக்கும் மேற்பட்ட வன இலாகாவினரும், பொலிஸாரும் வரவழைக்கப்பட்டனர். சிறுத்தையைப் பிடிக்க கூண்டும் வைக்கப்பட்டது. மயக்க ஊசி செலுத்திப் பிடிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் தலைமைச் செயலக வளாகத்துக்குள் ஏராளமான மரங்களும், புதர்களும் இருந்ததால் அந்தச் சிறுத்தை எங்கே புகுந்தது என்பதை எளிதில் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த நிலையில் நேற்று முன் தினம் பிற்பகல் அந்த சிறுத்தை தலைமைச் செயலகத்தின் அருகே உள்ள ஆளுநர் மாளிகையின் பண்ணை பகுதிக்குள் பதுங்கியிருப்பது தெரியவந்தது. இதையடுத்து வன இலாகாவினர் அந்தச் சிறுத்தையின் மீது மயக்க ஊசியை செலுத்தினர். இதனால் சிறுத்தை மயக்கம் அடைந்து கீழே சாய்ந்தது. அந்த சிறுத்தையை வன இலாகாவினர் மீட்டு ஒரு கூண்டில் ஏற்றினர். பின்னர் அது வனப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு விடப்பட்டது.

சிறுத்தை புகுந்ததால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தலைமைச் செயலக ஊழியர்கள் யாரும் நேற்று முன்தினம் பிற்பகல் வரை அலுவலகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. இதனால் அலுவலகப் பணிகள் சுமார் 5 மணி நேரம் முடங்கின.

# ஆப்கானில் புதிதாக பிறந்த 12 குழந்தைகள் திடீர் சாவு!

## அதிர்ச்சியில் மருத்துவமனை வட்டாரம்



காபூல், நவ. 07

ஆப்கானிஸ்தானில் மருத்துவ மனை ஒன்றில் புதிதாக பிறந்த 12 குழந்தைகள் திடீரென உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானின் வடக்கிலுள்ள பன்ஷீர் பகுதியில் அமைந்துள்ள மருத்துவமனை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 2 மணிவரையான நேரத்தில் இந்தக் குழந்தைகள் உயிரிழந்துள்ளன என மருத்துவமனை நேற்று முன்தினம் திங்கட்கிழமை அறிவித்துள்ளது. இந்தக் குழந்தைகள் பிறந்து 6 நாட்களிலிருந்து 12 நாட்கள் வரையானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளுக்கு திடீரெனப் பாதிப்பு ஏற்படவே தீவிர சிகிச்சை பிரிவுக்குக் கொண்டு செல்லப்பட்டன. அதன் பின்னர் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தும் குழந்தைகள் அனைத்தும் உயிரிழந்து விட்டன. இதனையடுத்து உடனடியாக மருத்துவமனை நிர்வாகம் சுகாதார அதிகாரிகளைத் தொடர்பு கொண்டுள்ளதுடன் தனியார் ஆய்வக உதவியுடன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் முடிவுகள் தெரிந்த பின்னர் அது பற்றிய தகவல்கள் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக பிறந்த குழந்தைகளின் மர்ம மரணத்திற்கான காரணங்கள் பற்றி விசாரணை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கமரூனில் பள்ளி மாணவர்கள் உட்பட 79 பேர் பயங்கரவாதிகளால் கடத்தல்

யவுண்டி, நவ. 07

கமரூனில் மாணவர்கள் உள்ளிட்ட 79 பேர் பயங்கரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளமையானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆங்கிலோபோன் என்னும் பயங்கரவாத இயக்கத்தினாலேயே இந்தச் சம்பவம் அரங்கேற்றப்பட்டுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கமரூன் நாட்டிலுள்ள பாடசாலையொன்றின் அதிபர், ஆசிரியர் மற்றும் மாணவர்கள் உள்ளிட்ட 79 பேர் பயங்கரவாதிகளால் துப்பாக்கி முனையில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

மத்திய ஆபிரிக்க நாடுகளில் ஒன்றாக விளங்கும் கமரூன் நாட்டில், இடம்பெற்றுள்ள இந்த அதிர்ச்சிகரமான சம்பவமானது அந்த நாட்டில் தனி நாடு கோரி ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆங்கிலோபோன் என்னும் பயங்கரவாத இயக்கத்தினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டின் வடமேற்கு பகுதியின் தலைநகரான பமெண்டா அருகே நீவின் என்ற கிராமத்தில் உள்ள ஒரு மேல்நிலைப்பள்ளிக்குள் துப்பாக்கி ஏந்திய பயங்கரவாதிகள் நுழைந்துள்ளனர்.

அங்கு படித்து வந்த 10 முதல் 14 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் 78 பேர் மற்றும் பள்ளியின் தலைமை ஆசிரியர், ஆசிரியர், சாரதி ஆகியோரைத் துப்பாக்கி முனையில் பயங்கரவாதிகள் கடத்திச் சென்றனர்.

கடத்திச் செல்லப்பட்டவர்கள் எங்கு கொண்டு செல்லப்பட்டனர், பயங்கரவாதிகளின் கோரிக்கைகள் என்ன என்பன போன்ற விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை. கடத்தலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளை தேடும் பணியை கமரூன் அரசு முடுக்கி விட்டுள்ளது. (ஐ)

# பெருவில் விபத்தில் 18 பேர் உயிரிழப்பு!

லிமா, நவ. 07

பெருவில் இடம்பெற்ற விபத்தில் 18 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 39 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பேருந்து ஒன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து அதிவேக வீதியில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை தடம் புரண்டமையினாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களில் 12 பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளடங்குவதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறான நிலையில் விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

# 18 மாதக் குழந்தை ஒன்றை கடலிலிருந்து மீட்ட மீனவர்

## நிகழவே முடியாத அதிசயம்

வெலிங்டன், நவ. 07

நிகழவே நிகழ முடியாத அதிசயம் என வர்ணிக்கப்படும் நிகழ்வொன்றில் பெருங்கடல் ஒன்றிலிருந்து 18 மாதக் குழந்தையை மீட்டு இருக்கிறார் மீனவர் ஒருவர்.

இந்தச் சம்பவமானது நியூஸிலாந்தில் நிகழ்ந்துள்ளது.

நியூஸிலாந்து வடக்கு தீவு ஒன்றில் உள்ள மடாடா கடற்கரையில் கஸ் ஹட் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்தார்.

அப்போது கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, கடலில் ஒரு பொருள் மிதந்து வருவதைக் கண்டார்.

முதலில் அதனைப் பொம்மை எனக் கருதினார். பின்னர்தான் அது குழந்தை என அவருக்கு தெரிந்தது.

### சிணுங்கல்

கஸ் ஹட், முதலில் பொம்மை என்றுதான் கருதினேன். பின்னர் அதன் அருகே சென்று கைகளால் தூக்கும் வரை, குழந்தை என்று எனக்கு தெரியாது என்கிறார்.

அவன் சிறிதாகச் சிணுங்கினான், அதன் பிறகே 'இறைவா இவன் உயிருடன் இருக்கிறான்' என்று உணர்ந்தேன் என்கிறார்.

இதில் வியப்பான விடயம் என்னவென்றால் வழக்கமாக ஹட் மீன்பிடிக்கும் இடத்திற்கு செல்லவில்லை. வேறு இடத்திற்கு மீன் பிடிக்க சென்றார். அதனால்தான், அவரால் அன்று அந்த குழந்தையை காப்பாற்ற முடிந்தது.

### தவறிய குழந்தை

அந்த குழந்தை பெற்றோர்களிடமிந்து தவறி பெருங்கடல் வரை வந்துவிட்டது. குழந்தை கடலிலிருந்து மீட்கப்பட்டது என்று தெரிந்ததும், முதலில் அந்த குழந்தையின் தாய் அச்சத்தில் கத்தினார். பின் தான் சமாதானமானார்.

இவர்கள் அந்த கடற்கரைப் பகுதியில் உள்ள மூர்பி விடுமுறை முகாமில் தங்கி இருந்தனர். இந்த விடுமுறை முகாமின் உரிமையாளர், இதனை நிகழவே நிகழாத சம்பவம் என விவரிக்கிறார்.

அந்த குழந்தை இப்போது நலமாக இருப்பதாக பொலிஸார் பிபிசியிடம் தெரிவித்தனர்.

# இந்தோனேசிய விமான விபத்து; வேகக் கருவி கோளாறே காரணம்

## உயிரிழந்தோரின் உறவினர்கள் கடும் கோபத்தில்



ஜகார்த்தா, நவ. 07

இந்தோனேசியாவில் கடந்த வாரம் கடலுக்குள் மூழ்கி விபத்துக்குள்ளான பயணிகள் விமானத்தின் வேகத்தைக் காட்டும் கருவி அதன் கடைசி நான்கு பயணங்களிலும் கோளாறாகவே இருந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விமானத்தின் வேகத்தைச் சுட்டிக்காட்டும் கருவியில் கோளாறு இருந்தது விமானத்தின் கறுப்புப் பெட்டி மூலம் தெரியவந்துள்ளது.

லயன் ஏர் விமான சேவையின் ஜேடி 610 எண் விமானம் 189 பயணிகளுடன் இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவிலிருந்து கிளம்பியவுடன் கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது.

திங்களன்று நடந்த கூட்டத்தில் விபத்தில் பலியானவர்களின் உறவினர்கள் இந்தோனேசிய அதிகாரிகளை விபத்து குறித்து கோபமாக பல கேள்விகளைக் கேட்டனர்.

அவர்கள் விமான விபத்துக்கான காரணங்களை அறிய விரும்பினர். மேலும் மீட்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறினர்.

இந்த விமான விபத்திற்கான காரணம் இன்னும் முழுமையாக தெரியவில்லை.

### கை கூப்பி மன்னிப்பு

நாங்கள் இங்கு பாதிக்கப்பட்டுள்ளோம். நீங்கள் எங்கள் இடத்தில் இருப்பதுபோல் நினைத்துப் பாருங்கள் என்றார் நஜிப் ஃபுகோனி என்ற ஓர் உறவினர்

லயன் எயார் விமான சேவையின் தலைவர் அந்த கூட்டத்தில் பங்கேற்றார். அவர் பேசவில்லை. தனது கையைக் கூப்பி உறவினர்களின் முன் தலை குனிந்து நின்றார்.

விமானி இயக்கும் வேகத்தை காட்டும் கருவி நம்பமுடியாத நிலையில் இருந்ததாகவும், உயரத்தை அளக்கும் கருவியில் தகவல்கள் விமானி மற்றும் இணை விமானிக்கு வெவ்வேறாக இருந்ததாகவும் பிபிசிக்கு கிடைத்த விமானத்தின் தொழில் நுட்பம் மற்றும் இயங்குமுறை குறித்த ஆரம்பகட்டத் தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

ஆனால் இந்தோனேசியாவின் தேசிய போக்குவரத்து பாதுகாப்பு குழு விமானத்தின் இதற்கு முந்தைய இரண்டு பயணத்திலும் பிரச்சினைகள் இருந்தன எனத் தெரிவித்துள்ளது.

அவர்கள் இயந்திரக் கோளாறால் விபத்து நேர்ந்ததா அல்லது முறையற்ற பராமரிப்புகள் அல்லது வேகத்தை காட்டும் கருவியில் ஏற்பட்ட கோளாறால் ஏற்பட்டதா என்பது குறித்து கூறவில்லை.

தற்போது விபத்துக்கான காரணங்கள் குறித்து நாங்கள் கண்டறிந்து வருகிறோம் என விசாரணையாளர் நூர்கயோ உடோமோ தெரிவித்தார்.

நாட்டின் உள்ள அனைத்து 737 மேக்ஸ் ரக விமானங்களை சோதிக்க இந்தோனேசிய அரசு உத்தரவிட்டுள்ளது.

### காத்திருப்பு

பயணிகளின் உறவினர்கள் தங்களின் அன்பிற்குரியவர்களின் உடல்களை பெற காத்திருக்கின்றனர் ஆனால் இதுவரை எடுக்கப்பட்ட உடல்களில் 14 பேர் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விமானி அறையில் இருக்கும் குரல் பதிவு கருவியை மீட்டுப்பணியாளர்கள் தேடி வருகின்றனர்.

### மோசமான வான் பயண பாதுகாப்பு

தீவுகள் நிறைந்த நாடான இந்தோனேசியா விமானப் பயணங்களை பெரிதும் நம்பியுள்ளது. ஆனால் அதன் விமான சேவை நிறுவனங்களின் பாதுகாப்பு மோசமான நிலையிலே இருந்து வந்துள்ளது.

லயன் எயார் விமான சேவை 1999ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. உள்ளூர் விமான சேவை மற்றும் தெற்காசியா, ஆஸ்திரேலியா மற்றும் மத்திய கிழக்குக்கு விமானங்களை இயக்கி வருகிறது.

கடந்த காலங்களில் மோசமான நிர்வாகம் மற்றும் பராமரிப்பால் 2016ஆம் ஆண்டு வரை ஐரோப்பிய வான்வெளியில் பறப்பதற்கு தடை செய்யப்பட்டிருந்தது.

2013 ஆண்டு லயன் எயார் விமானம் ஒன்று பாலி சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கும்போது கடலில் விழுந்து விபத்துள்ளானது. இருப்பினும் அதிலிருந்த 108 பேரும் உயிர் தப்பினர்.

2004ஆம் ஆண்டு ஜகார்த்தாவிலிருந்து வந்த விமானம் ஒன்று சோலோ சிட்டியில் தரையிறங்கும்போது விபத்துள்ளானதில் 25 பேர் பலியாகினர். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# ஜே.வி.பியுடன் இணங்கிச் செயற்பட சம்பந்தன் முடிவெடுத்தமை சரியா?



இலங்கையில் மாறி மாறி ஆட்சியமைத்து வரும் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு கட்சிகளும் தனித்து ஆட்சி அமைக்கும் போட்டியில் தமிழ், முஸ்லிம் கட்சிகளையும் ஏனைய சிறிய கட்சிகளையும் பேரம்பேசி வருகின்றன. இந்த நிலையில் நாட்டின் அரசமைப்பிற்கு முரணாக ஆட்சி அமைப்பதற்கோ, அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கோ ஒருபோதும் இடமளிக்க முடியாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஜே.வி.பியும் தெரிவித்துள்ளன. ஜனநாயகத்திற்கு முரணான சதித்திட்டங்களை இலங்கை நாடாளுமன்றத்தில் தோற்கடிப்பது தொடர்பான தலையீட்டினை மேற்கொள்வது குறித்து இரு கட்சிகளுக்கும் இடையே இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் மக்கள் விடுதலை முன்னணி எனப்படும் ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய இருகட்சிகளின் தலைவர்களும் கூறியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 3 மணியளவில் கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கை அரசும் அதன் கீழான திணைக்களங்கள், இலங்கை இராணுவம் என்ற கட்டமைப்புக்கள், தமிழர் தாயகப் பகுதிகளில் சட்டத்திற்கு முரணாகவும், ஜனநாயகத்திற்கு விரோதமாகவும் அராஜகமாகச் செயற்படுவது குறித்து இதுவரை கண்டித்துக் குரல் எழுப்பாத ஜே.வி.பியோடு இணைந்து சம்பந்தன், ரணிலுக்காகப் பேசிய ஜனநாயகம் தொடர்பாகச் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இச்சந்திப்பின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரான எம்.ஏ.சுமந்திரனும், மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில் பிமல் ரத்நாயக்க மற்றும் கே.டி.லால் காந்த என்போரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பை அடுத்து ஊடகங்களுக்கு அநுரகுமார திசாநாயக்க கருத்து வெளியிட்டார்.

ஜனநாயகம் எங்கே கேள்விக் குரியதாக்கப்பட்டாலும், அப்போது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு முன்னிற்கத் தாங்கள் தயாராகவுள்ளதானர் என அனுர குமார திஸாநாயக்கா தெரிவித்தார்.

அதேவேளை, தென்னிலங்கையில் மூன்றாவது அரசியல் சக்தியாக விளங்கும் ஜே.வி.பி. தங்களை மாற்று அரசியல் சக்தியாக அடையாளப்படுத்தினாலும்,அதுவும் கூட சிங்கள, பௌத்த தேசிய இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டது என அவதானிகள் கூறுகின்றனர்.

குறிப்பாக 2006 ஆம் ஆண்டு, மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் அவருடைய ஆதரவுடன் இலங்கை உயர்நீதிமன்றத்தில் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு எதிராக மனு ஒன்றைத் தாக்கல் செய்து, இரு மாகாணங்களையும் தனித்தனியாக பிரிப்பதற்கு காரணமாக அமைந்தவர்கள் ஜே.வி.பியினர்தான்.

2005 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது அவருக்கு ஆதரவு வழங்கியமையுடன் நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எதிராகவும் தீவிரமான பிரசாரங்களை ஜே.வி.பி மேற்கொண்டிருந்தது.

2002 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்துடன் நோர்வேயின் ஏற்பாட்டில் பேச்சுக்கள் ஆரம்பமானபோது இலங்கைத் தீவு முழுவதிலும் எதிர்ப்பிரசாரங்களில் ஜே.வி.பி. ஈடுபட்டிருந்தது.

2006 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷவை போருக்குள் தள்ளியவர்கள் ஜே.வி.பியினர்தான் என்று அப்போது சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளராக இருந்த சுனில் ஜயசேகர குற்றம் சுமத்தியிருந்தார்.

## வடக்கு, கிழக்கைப் பிரிக்க உயர்நீதிமன்றத்தை நாடியவர்களே இந்த ஜே.வி.பியினர்தான்



அது மாத்திரமல்ல, ஈழத் தமிழர்களின் பிரச்சினைத் தீர்வுக்கு இலங்கை அரசு நிர்வாக ரீதியான மாற்றங்களைச் செய்தால் போதும் என்பதே ஜே.வி.பியின் நிலைப்பாடு.

வடக்கு – கிழக்கு இணைப்பு உள்ளிட்ட தமிழர்களின் சுயாட்சிக் கோரிக்கைக்கு ஜே.வி.பியின் தற்போதைய தலைவர் அநுரகுமார திஸாநாயக்கா இலங்கை நாடாளுமன்றத்தில் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலிலும் ஜே.வி.பி.அந்த நிலைப்பாட்டிலேயே இருக்கின்றது. இந்த நிலையில் சம்பந்தன் எவ்வாறு ஜே.வி.பியுடன் இணக்கத்தை ஏற்படுத்தினார் என்பது குறித்து அவதானிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தனியே ரணில் விக்கிரமசிங்கவை மாத்திரம் காப்பாற்றுவதற்காக. சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் ஜே.வி.பியை சந்தித்தாரா, அல்லது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற அடிப்படையில் கலந்துரையாடினாரா என்பது குறித்தும் கேள்விகள் எழுந்துள்ளன.

சட்டத்திற்கு முரணாக ரணில் அரசாங்கம் பதவி கவிழ்ந்துவிடக்கூடாது என்றும் அரசியல் யாப்புக்கு முரணாக எவரையும் செயற்பட அனுமதிக்க முடியாது என்ற அடிப்படையிலும் ஜே.வி.பியோடு கூட்டுச் சேருவது என்றால், அதன் பின்னரான சூழலில் வடக்கு, கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் ஏற்படப் போகும் சட்டத்திற்கு முரணான செயற்பாடுகளை நிறுத்த ஜே.வி.பி. சம்பந்தனுக்கு ஒத்துழைப்பு வழங்குமா?

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழர் தாயகப் பகுதிகளில் இலங்கை இராணுவம் நிலைகொண்டுள்ளது. சிவில் செயற்பாடுகளில் இலங்கை இராணுவம் தலையிடுகின்றது. பொதுமக்களின் காணிகள் இராணுவத்தினரால் அபகரிக்கப்படுகின்றன.

இந்தச் செயற்பாடுகள் கொழும்பை மையப்படுத்தி இயங்கும் இலங்கை அரசு என்ற கட்டமைப்பின் சிங்கள உயர் அதிகாரிகள் மூலமாக சட்டத்திற்கு முரணாகவும், சட்டத்திற்குரியது என காண்பிக்கும் போலியான ஆவணங்களுடனும் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான சூழலில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இலங்கை அரசும் அதன் கீழான திணைக்களங்கள், இலங்கை இராணுவம் என்ற கட்டமைப்புகள், தமிழர் தாயகப் பகுதிகளில் சட்டத்திற்கு முரணாகவும், ஜனநாயகத்திற்கு விரோதமாகவும் அராஜகமாக செயற்படுவது குறித்து இதுவரை கண்டித்துக் குரல் எழுப்பாத ஜே.வி.பியோடு இணைந்து சம்பந்தன், ரணிலுக்காகப் பேசிய ஜனநாயகம் தொடர்பாக சந்தேகங்கள் எழுந்துள்ளன.

ஜே.வி.பியோடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக்குழுவுடனோ, அல்லது தமிழரசுக் கட்சியுடனோ சம்பந்தன் கலந்துரையாடவில்லையெனக் கட்சித் தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் என்ற அடிப்படையில் சந்தித்திருந்தாலும், வடக்கு – கிழக்கு பகுதிகளில் இதுவரையும் பின்பற்றப்படாத ஜனநாயகம் பற்றியும் சட்ட ஆட்சி இல்லாத சூழல் குறித்தும் அக்கறைப்படாத ஜே.வி.பியோடு ஒரு மணித்தியால சந்திப்பில் எப்படித் திருப்பங்கள் ஏற்பட்டன என்பது குறித்து சம்பந்தன் தமிழ் மக்களுக்கு பகிரங்கமாகத் தெரியப் படுத்த வேண்டும் எனவும் அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

நன்றி:கூர்மை இணையம்

# கஜேந்திரகுமார் சின்னப்பையன் அவர் கதைப்பது சீரியஸானதல்ல

## கூறுகிறார் சித்தார்த்தன் எம்.பி.



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவம்பர் 07

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் சின்னப்பையன். அவர் கதைப்பதை யாரும் சீரியஸாக எடுக்கத் தேவையில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்கள் பேரவையில் புளொட் உட்பட பல கட்சிகளும் பொது அமைப்புக்களும் அங்கம் வகிக்கின்றன. அதேபோன்று கஜேந்திரகுமாரின் கட்சியும் அங்கம் வகிக்கின்றது. இந்த நிலையில் அந்தப் பேரவையிலிருந்து எங்களை வெளியேற்றுமாறு கஜேந்திரகுமார் கோரியுள்ளமையை நாங்களும் அறிந்து கொண்டிருக்கின்றோம்.

ஆனால் பேரவையிலிருந்து வெளியேறுமாறு பேரவையைச் சேர்ந்த யாரும் எமக்குத் தெரிவிக்கவில்லை. நாங்கள் தொடர்ந்தும் அங்கம் வகித்துக் கொண்டே இருக்கின்றோம். பேரவையின் எழுக தமிழ் உட்பட பேரவையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் நாங்கள் ஆதரவு அளித்திருக்கின்றோம். எம்மைப் போன்று சுரேஷ் பிரேமச் சந்திரனின் பங்கும் அளப்பரியது. ஆகவே பேரவை என்பது தனியே ஒரு கட்சியல்ல. அது பல கட்சிகள், பொது அமைப்புக்கள் இணைந்த கூட்டு ஆகும். ஆகவே அது ஒருவருக்கோ அல்லது ஒரு கட்சிக்கோ சொந்தமானது அல்ல.

ஆக கஜேந்திரகுமார் தான் எம்மை வெளியேற்றுமாறு கோரியிருக்கின்றார். அவர் ஒரு சின்னப் பொடியன். அவரின் கருத்துக்களைச் சீரியஸாக எடுக்கத் தேவையில்லை.

எம்மை வெளியேற்று என்று கூறும் அவர் தான் என்ன செய்யப் போகின்றார் என்பதை இன்னும் மக்களுக்குச் சொல்லவில்லை.

ஆகவே முதலில் தன்னுடைய நிலைப்பாட்டை அவர் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். தாம் எதனையுமே செய்யாமல் அல்லது தெரிவிக்காமல் மற்றயவர்களை விமர்சிப்பதனூடாகத் தமிழ் மக்களுக்கு எதனையும் பெற்றுக் கொடுக்கலாம் அல்லது தன்னுடைய அரசியல் பயணத்தை தொடர்ந்து முன்னெடுக்கலாமென்று அவர் நினைக்கக் கூடாது. அவ்வாறு அவர் கருதுவதும் தவறு தான்.

தமிழ் மக்களுக்கு அவர் என்ன செய்யப் போகின்றார் என்பதே கேள்வியாக உள்ளது. அதாவது அவர் அகிம்சை ரீதியாக அல்லது ஆயுத ரீதியாகப் போராடப் போகின்றாரா அல்லது இதனையெல்லாம் விடுத்து தொடர்ந்தும் ஏனையவர்களை விமர்சித்துக் கொண்டு தான் இருக்கப் போகின்றாரா என்பதற்குப் பதிலளிக்கவேண்டும் – என்றார்.

(ஐ-07)

# தேசிய தீபாவளித் திருநாள் நிகழ்வுகள் வவுனியாவில்





வவுனியா, நவ. 07

தேசிய தீபாவளி திருநாள் நிகழ்வுகள் வவுனியா, கந்தசாமி ஆலயத்தில் சிறப்பாக நேற்று இடம்பெற்றன.

வவுனியா மாவட்ட செயலகமும், இலங்கை தேசிய பாதுகாப்புப் படையினரும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்போது கந்தசாமி ஆலய முன்றிலில் இராணுவத்தினர் மற்றும் அரச அதிகாரிகளை வரவேற்கும் நிகழ்வும், ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன. இராணுவ அதிகாரிகளுக்கு இந்து மத குருமாரால் ஆசியும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.ஹனீபா, வன்னி மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா, மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், வர்த்தகர் சங்கத் தலைவர் சி.சுஜன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தென்னக்கோன், இராணுவ அதிகாரிகள், இராணுவத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# ஆவா குழு பிரசுரங்களை வழங்கினாரென கைதாகிய ஊடகவியலாளருக்குப் பிணை

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

வவுனியா, நவ. 07

வவுனியாவில் ஆவா குழு தொடர்பான துண்டுப் பிரசுரம் விநியோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கடந்த 2 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்ட வவுனியா ஊடகவியலாளர் இ.தர்சனை பிணையில் செல்ல வவுனியா மாவட்ட நீதிமன்றம் நேற்று முன் தினம் அனுமதி வழங்கியுள்ளது.



வவுனியாவில் இருந்து வெளிவரும் தினப்புயல் பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளராகிய இம்மானுவேல் தர்சன் என்பவரே பொலிஸாரினால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவரை மாவட்ட நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்து வழக்கை ஜனவரி மாதம் 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது.


விடுதலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சக ஊடகவியலாளர்களுடன் சென்று வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில், வவுனியா பொலிஸார் தகுந்த ஆதாரங்கள் இன்றித் தன்னைக் கைது செய்து முறையற்ற விதத்தில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்தமை, கைவிலங்கிடப்பட்ட நிலையில் வவுனியா பொலிஸ் நிலையத்திலிருந்து நீதிமன்றம் வரை ஏ-9 வீதியால் அழைத்துச் சென்றமை, செய்யாத குற்றத்தை ஒப்புக்கொள்ளுமாறு வற்புறுத்தியமை போன்ற செயற்பாட்டால் நான் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளேன். என் மீது பொலிஸாரினால் அடக்குமுறை பிரயோகிக்கப்பட்ட நிலையில் எனக்கு நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட்டு தீர்வு வழங்கப்படவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

(ஐ)

# என்னுடன் ஏற்பட்ட பிரச்சினைக்காக மக்களை ஜனாதிபதி ஏமாற்றக்கூடாது

## ரணில் விக்கிரமசிங்க பதிலடி



கொழும்பு, நவ. 07

ஜனாதிபதிக்கு என்னுடன் தனிப்பட்ட பிரச்சினை இருக்கலாம். ஆனால் அவர், அரசமைப்புக்குச் சட்டவிரோதமான மற்றும் முறைகேடான நடவடிக்கைகள் மூலம் நாட்டைக் குழப்பத்தில் தள்ளியதன் மூலம் தன்னைத் தேர்ந்தெடுத்த மக்களை ஏமாற்றக்கூடாது என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசுக்கு ஆதரவாகக் கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேரணியின் நிறைவில் உரையாற்றுகையில் ஜனாதிபதி மைத்திரிபால, ரணில் விக்கிரமசிங்கவைக் கடுமையாகச் சாடியிருந்தார்.

இந்த நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க தனது கீச்சகத்தில் நேற்று முன்தினம் இரவு மேற்கண்டவாறான கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி போன்று அட்டையாக இருக்காமல் வண்ணாத்துப் பூச்சியாகவே இருக்க விரும்புகின்றேன் என்று மங்கள சமரவீர தனது கீச்சகத்தில் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# மைத்திரி – மஹிந்த இணைவு பெருமகிழ்ச்சியைத் தருகிறது

## தயாசிறி ஜயசேகர பெருமிதம்



கொழும்பு, நவ. 07

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து ஆட்சி அமைத்தமை மகிழ்ச்சியளிப்பதாக அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் தமது அமைச்சில் கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன – மஹிந்த அரசு ஆட்சி அமைத்தமையை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

அத்துடன், நாட்டின் தலை சிறந்த தேசிய தொழிற் தகைமை மற்றும் தொழில்நுட்ப அறிவுடைய சந்ததியினரை உருவாக்கும் வகையில் திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சராக கடமையேற்றதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

நாட்டின் இளம் சந்ததியினருக்குச் சிறந்த வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்தகைமை என்பவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான புதிய செயற்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம்.

அதனூடாகப் பாடசாலையை விட்டு வெளியேறிய மற்றும் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சைகளில் சித்தி பெறாத மாணவர்களுக்கும் தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

அதன் மூலம் சிறந்த வேலைவாய்ப்புக்களை பெற்று சமூகத்தில் சிறந்த சந்ததியினராக திகழ வழிவகுப்பதற்காகவே இவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன – என்றார்.

(ஐ)



# காலி மைதானத்தில் நேற்று ஹேரத் 100 ஆவது விக்கெட்

கொழும்பு,நவ.07

தனது இறுதிப் போட்டியில் விளையாடிய இலங்கை அணியின் இடதுகை சுழற்பந்துவீச்சாளர் ரங்கன ஹேரத் காலி மைதானத்தில் தனது 100 ஆவது சர்வதேச டெஸ்ட் விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டி காலி சர்வதேச அரங்கில் இடம்பெற்று வருகின்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி வருகின்றது.

இதில் இங்கிலாந்து அணியின் ஜோ ரூட்டின் விக்கெட்டை ரங்கன ஹேரத் கைப்பற்றியபோது, அவர் காலி சர்வதேச அரங்கில் தனது 100 ஆவது விக்கெட்டை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

# பார்சிலோனோ அணிக்கு மீளத் திரும்பும் மெஸ்ஸி

## இரசிகர்கள் கொண்டாட்டம்



புகழ் பூத்த உதைபந்து கழக அணியான பார்சிலோனோ அணி, தற்போது ஐரோப்பாவிலிருக்கும் உயர்தர உதை பந்து கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் சம்பியன்ஸ் லீக் உதைபந்துத் தொடரில், விளையாடி வருகின்றது.

இந்நிலையில் இத்தொடரில் குழு 'பி' யில் இடம்பெற்றுள்ள பார்சிலோனோ அணி, தான் விளையாடிய மூன்று போட்டி களிலும் அபார வெற்றியைப் பெற்று 9 புள்ளிகளுடன் முத லிடத்தில் உள்ளது.

இதற்கிடையில் இன்று சேன் சிரோ விளையாட்டரங்கில் நடைபெறும் போட்டியில், பார்சிலோனோ அணி, இன்டர் மிலான் அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டியில், காயம் காரணமாக 3 வாரங்கள் விளையாடாமல் இருந்த பார்சிலோனா அணியின் தலைவர் லியோனல் மெஸ்ஸி, விளையாடவுள்ளார் என அணியின் பயிற்சியாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மீண்டும் அணிக்கு திரும்புவதானது, பார்சிலோனோ அணியை மேலும் வலுப்படுத்துமெனவும் பயிற்சியாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்தோடு, நீண்ட நாட்களாக மெஸ்ஸியின் விளையாட்டை காணாமல் ஏங்கிப் போயிருந்த இரசிகர்கள், மீண்டும் அவரது விளையாட்டை மைதானத்தில் காண ஆவலாகக் காத்திருக்கின்றனர்.

அணியின் தலைவரான மெஸ்ஸிக்கு, கடந்த ஒக்டோபர் 20ஆம் திகதி செவிலா அணிக்கு எதிரான போட்டியின்போது, வலது கையில் எழும்பு முறிவு ஏற்பட்டது.

இதனால் அவருக்கு மூன்று வாரங்களுக்கு ஓய்வளிக்கப்பட்டிருந்தது. இதனால் அவர் அடுத்து வந்த எந்த போட்டிகளிலும் பங்கேற்காமல் இருந்து வந்தார்.

இதனால் பார்சிலோனா அணியின் பரம எதிரியான ரியல் மட்ரிட் அணியுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முக்கிய போட்டியிலும் அவர் பங்கேற்கவில்லை. எனினும் பார்சிலோனா அணி அந்தப் போட்டியில், 5:1 என்ற கோல்கள் கணக்கில் அபார வெற்றிபெற்றது.

இந்நிலையில் காயம் காரணமாக சிகிச்சையில் இருந்த மெஸ்ஸி, தற்போது காயத்தில் இருந்து மீண்டு பயிற்சிக்குத் திரும்பியுள்ளார். அத்தோடு இன்றைய போட்டியில் விளை யாடுவதனையும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

# பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட்: வெற்றி பெற்றது சிம்பாப்வே அணி



சிம்பாப்வே கிரிக்கெட் அணி, ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக பங்களாதேஷிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

அங்கு சென்றுள்ள சிம்பாப்வே அணி, பங்களாதேஷ் அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இந்நிலையில் முதலாவதாக இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் தொடர் நடைபெற்றது. இதில் மூன்று போட்டிகளிலும் வெற்றி பெற்று பங்களாதேஷ் அணி, தொடரைக் கைப்பற்றியது.

இந்நிலையில் இரு அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகின்றது.

இதன் முதலாவது டெஸ்ட் போட்டி, கடந்த 3ஆம் திகதி சில்ஹெட் மைதானத்தில் ஆரம்பமானது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய சிம்பாப்வே அணி, சீன் வில்லியம்ஸ் மற்றும் மசகட்சா ஆகியோரின் அரைச் சதத்தின் துணையுடன் 282 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக சீன் வில்லியம்ஸ் 88 ஓட்டங்களையும், மசகட்சா 52 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் தஜ்சுல் இஸ்லாம் 6 விக்கெட்டுகளையும், இஸ்முல் இஸ்லாம் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து பதிலுக்குத் தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய பங்களாதேஷ் அணி, 143 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டமாக, அரிபுல் ஹக் ஆட்டமிழக்காது 41 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் சிகான்டர் ரஸா, டென்டாய்சுடாரா ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், கெய்ல் ஜார்வீஸ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளனர்.

இதனையடுத்து, 139 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய சிம்பாப்வே அணி, 181 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதற்கமைய பங்களாதேஷ் அணிக்கு 321 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டமாக மசகட்சா 48 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் தஜ்சுல் இஸ்லாம் 5 விக்கெட்டுகளையும், மெயிடி ஹசன் 3 விக்கெட்டுகளையும், இஸ்முல் இஸ்லாம் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

321 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி, இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய பங்களாதேஷ் அணி, 169 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதற்கமைய சிம்பாப்வே அணி, 151 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இதன்போது, பங்களாதேஷ் அணி சார்பில், இம்ரூல் கெய்ஸ் 43 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் பிரெண்டன் மவுடா 4 விக்கெட்டுகளையும், சிகன்டர் ரஸா 3 விக்கெட்டுகளையும், வெலிங்டன் மசகட்சா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சிம்பாப்வே அணி சார்பில், பிரகாசித்த சீன் வில்லியம்ஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

சிம்பாப்வே அணி, ஐந்து வருடங்களுக்கு பிறகு பெற்றுக் கொண்ட முதல் டெஸ்ட் வெற்றி இதுவாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல், வெளிநாட்டு மண்ணில் பெற்றுக்கொண்ட மூன்றாவது வெற்றியாகவும் இது பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் 11ஆம் திகதி டாக்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# கோஹ்லியின் சாதனை அசாமினால் முறியடிப்பு



இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லியின் சாதனையொன்றை பாகிஸ்தானின் இளம் வீரரான பாபர் அசாம் முறியடித்துள்ளார்.

நியூசிலாந்து அணிக்கு எதிரான நேற்று முன்தினம் இருபதுக்கு – 20 போட்டியின்போது 48 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட பாபர் அசாம் அதி வேகமாக ஆயிரம் ஓட்டங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

பாகிஸ்தான் – நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 3 ஆவது மற்றும் இறுதியுமான இருபதுக்கு – 20 கிரிக்கெட் போட்டி டுபாயில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 166 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆரம்ப வீரராக களமிறங்கிய பாபர் அசாம் 58 பந்தில் 7 பவுண்டரி, 2 சிக்சருடன் 79 ஓட்டங்களைக் குவித்தார்.

இந்நிலையில் பாபர் அசாம் 48 ஆவது ஓட்டத் தைத் தாண்டும் போது இருபதுக்கு – 20 போட்டியில் 26 இன்னிங்ஸில் ஆயிரம் ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்தார்.

இதன்மூலம் இருபதுக்கு – 20 போட்டியில் அதி வேகமாக ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இதற்கு முன்னர் இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி 27 இன்னிங்ஸில் ஆயிரம் ஓட்டங்களைப் பெற்றிருந்தமையே சாதனையாக இருந்தது. இந்தச் சாதனையை தற்போது பாகிஸ்தானின் பாபர் அசாம் முறியடித்துள்ளார்.

பாபர் அசாம் 26 போட்டியில் 26 இன்னிங்ஸிலும் துடுப்பெடுத்தாடி 1031 ஓட்டங்களைப்பெற்றுள்ளார். இவரது சராசரி 54.26 ஆகும். 8 முறை அரைச்சதம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திலிருந்து ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவினால் மேற் கொள்ளப்பட்ட மேற்கொள்ளப் படுகின்ற நடவடிக்கைகள் அரச மைப்புக்கு விரோதமானவை. இந்தக் கேவலமான நடவடிக் கைகளுக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலை வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவருமான இரா.சம் பந்தன் வலியுறுத்தினார்.

இலங்கையின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் இலங் கைக்கான அமெரிக்காவின் புதிய தூதுவர் அலய்னா ரெப் லிட்ஸ் நேற்று எதிர்க்கட்சித் தலை வரும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனைச் சந்தித்துக் கலந் துரையாடினார். கொழும்பிலுள்ள இரா.சம்பந்தனின் இல்லத்தில் ஒரு மணிநேரம் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதன்போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனநாயக விழுமியங் களுக்கு எதிரான ஜனாதிபதியின் செயல்களை – நடவடிக்கைளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடி யாது. இதற்குத் தீர்வுகாண உடன டியாக செயற்பட்டு நாடாளுமன் றத்தைக் கூட்டுவதற்கான நட வடிக்கைகளை எடுக்குமாறு நான் சபாநாயகரை எழுத்து மூலமா கக் கேட்டுக்கொண்டேன். பெரும் பான்மையான எம்.பிக்களும் சபையை உடன் கூட்டுமாறு எழுத்து மூலம் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தனர். இதனை ஜனாதிபதியின் கவனத்துக்கு எழுத்து மூலம் சபாநாயகர் கொண்டு வந்தார். ஆனால், நாடாளுமன்றத்தைக் கூட்ட விடாமல் அதனை எதிர்வரும் 14ஆம் திகதி வரை ஜனாதிபதி முடக்கி வைத்துள்ளார். இது எந்த வகையில் நியாயமானது? எனவே, நாடாளுமன்றத்தை உடன் கூட்டுமாறு அமெரிக்கா அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் இதன்போது இரா.சம்பந் தன் கேட்டுக்கொண்டார்.

இலங்கை அரசு தமிழ் மக் களின் பிரச்சினைகளை போதி யளவு கையாளவில்லை. அரசி யல் கைதிகளின் விடுதலை, மீள் குடியேற்றம், படையினர்வசமுள்ள காணிகள் விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை போன்ற விடயங்களில் அரசு மந்த கதியிலேயே செயற்பட்டது.

இந்த விடயங்களில் போதிய ளவு முன்னேற்றம் காணப்படா மையானது, தமிழ் மக்களின் மத்தியில் அதிருப்தியை ஏற் படுத்தியுள்ளது.

தமிழ்மக்களின்பிரச்சினைக்கு பிளவுபடாத – பிரிக்கமுடியாத நாட்டுக்குள் உண்மையான ஏற் றுக்கொள்ளப்படக் கூடிய தீர் வொன்றை அடைவது அவசியம்.

அத்தகைய தீர்வை அடைய முடியாத பட்சத்தில், இந்த நாடு எதிர்நோக்கியுள்ள எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வுகாண முடி யாது போகும்.

இலங்கை அரசானது சர்வ தேச சமூகத்துக்கும், ஐ.நா. ம னித உரிமைகள் பேரவைக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறை வேற்றும் நோக்கில், அமெரிக்கா தொடர்ந்தும் இலங்கை தொடர் பில் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க வேண்டும் எனவும் அமெரிக்கத் தூதுவரிடம் இரா. சம்பந்தன் கோரிக்கை விடுத் தார்.(ஐ)

## சபாநாயகரைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தித்து தற்போதைய அரசியல் நெருக்கடிகள் குறித்து விவாதித் தார்.

பெரும்பான்மையை நிரூ பிக்கும் வரை – மஹிந்த ராஜ பக்ஷவை பிரதமராக ஏற்றுக் கொள்ள முடியாது என்று சபா நாயகர் நேற்றுமுன்தினம் அறி வித்திருந்த நிலையில் நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

தற்போதைய அரசியல்நெருக் கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நாடாளுமன்றத் தைக் கூட்டுவதன் முக்கியத்து வம் குறித்து சபாநாயகருடனான சந்திப்பின்போது கலந்துரையா டப்பட்டதாக, அமெரிக்கத் தூதர கத்தின் கீச்சகப் பதிவில் கூறப் பட்டுள்ளது.

இந்த ஜனநாயக நிறுவனங் கள் இலங்கை மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும். தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைச் சொல்லவிடுங்கள் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## இறுதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்ட நாடாளு மன்றத்தைக் கடும் அழுத்தம் காரணமாக 14 ஆம் திகதி கூட்டு வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள் ளார். நாடாளுமன்றத்தில் பெரும் பான்மையை நிரூபிக்கும் தரப்பே ஆட்சிபீடமேறலாம் என்பதால் குதிரைப் பேரம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பி னர்கள் 'பல்டி'யடித்து வருவதால் அவர்களுக்குக் கடிவாளம் போடும் முயற்சியில் ரணிலும், அவரின் சகாக்களும் இறங்கி யுள்ளனர்.

மறுபுறத்தில் சிறுகட்சி உறுப் பினர்களை வளைத்துப்போடும் நடவடிக்கையில் மஹிந்த – மைத் திரி கூட்டணி இறங்கியுள்ளது. மஹிந்த பக்கம் தாவிய உறுப் பினரொருவர், நேற்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியமையானது முக்கிய திருப்புமுனையாகபார்க்கப்படுகின் றது. எனவே, எதிர்வரும் 14 ஆம் திகதி நாடாளுமன்றம்கூடி, நம் பிக்கையை உறுதிப்படுத்தும் வரை அரசியல் பரபரப்பும், அரசி யல் குழப்பமும் இலங்கையில் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின் றது. (ஐ)

## தனக்குள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றதைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் ஜனாதிபதி மாளிகையில் இடம் பெறும்தீபாவளி நிகழ்வில் கலந்து கொண்டுவருகின்றேன். ஒவ்வொரு வருடமும் அடுத்த தீபாவளிக்கிடை யில் தமிழ் மக்களுக்கான தீர்வு வேண்டுமென வலியுறுத்தி வருகின்றேன். இம்முறையும் அதனையே உரத்து வலியுறுத்த விரும்புகின்றேன். கடந்த காலங் களில்எத்தனையோசந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டிருக்கின்றன. அதேபோன்று தற்போதைய சந்தர்ப்பத்தை மைத்திரிபால சிறிசேன தவறவிடக்கூடாதெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

அவருக்கொரு தார்மீகக் கடமையொன்று இருக்கின்றது. ஏனெனில் அவரை ஜனாதிபதி ஆக்கியதில் தமிழ் மக்களது பங்களிப்பு இருக்கின்றதை அவர் மறந்திருக்கமாட்டார். ஜனாதிபதி யின் செயற்பாடு ஒட்டுமொத்த தமிழர்களையும் ஏமாற்றி யுள்ளது.தற்போதுமாறியிருக்கின்ற அரசியல் சூழல் தொடர்பில் தமிழ் மக்கள் குழப்பமடைந்துள்ளனர். இதனால் ஜனாதிபதியின் காத்திர மான செயற்பாடுகளை தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

## நாடாளுமன்றத்தை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பான்மையான எம்.பிக் கள் மற்றும் சபாநாயகர் ஆகியோ ரின் வேண்டுகோள்களைப் புறந்தள்ளிவிட்டு நாடாளுமன் றத்தை எதிர்வரும் 14ஆம் திகதி வரை முடக்கி வைத்திருப்பது அராஜகத்தனம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலய்னா ரெப்லிட்ஸ், நேற்றுக்கொழும்பில், எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போதே அவர்மேற்கண்டவாறுதெரிவித்தார்.

இலங்கையில் ஜனநாயக வழிமுறைகள்பின்பற்றப்படவேண் டும் என்பதை அமெரிக்கா வலியுறுத்துகின்றது. தற்போது நிலவும் அரசியல் குழப்ப சூழ் நிலைக்கு ஜனநாயக வழிமுறை கள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும். இதற்குத் தடையாக உள்ளவர்கள் நாட்டு மக்களின் நலன் கருதி உண்மையின் பிர காரம் – நீதியின்வழியில் செயற்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

தமிழ் மக்களின் விடயத்தில் அமெரிக்கா தனிக் கவனம் செலுத்தியுள்ளது. இந்நாட்டில் மீண்டுமொரு இரத்தக்களரி ஏற்படக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் நோக்கத்துக்கும் அதன் நடைமுறைப்படுத்தலுக் கும் அமெரிக்கா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் எனவும் அவர் உறுதியளித்தார்.

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யளவில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பா ணத்துக்கு எரிபொருள் விநியோ கத்துக்கு பயணித்துக் கொண் டிருந்த எரிபொருள் பவுசரும் பரந்தன் பகுதியிலிருந்து கிளி நொச்சி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவரும் உயிரி ழந்தனர்.

ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் வைத்தியசாலைக் கொண்டு சென்றபோது உயிரிழந்தார்.

கிளிநொச்சி செல்வாநகரைச் சேர்ந்த செல்வராஜா கஜீபன் (வயது–18) என்று இளைஞர் ஒரு வர் அடையாளம் காணப்பட் டுள்ளார். மற்றைய இளை ஞன் அடையாளம் காணப்பட வில்லை என்று பொலிஸார் தெரி வித்தனர். (ஐ)

## ஐ.தே.கவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறந்துள்ளார் என்று அறிய முடி கின்றது .

அத்துடன், அவர்தனது தாய்க் கட்சியானஐக்கியதேசியக்கட்சிக்கு ஆதரவு வழங்குகிறார் என்று அந்தக் கட்சி உறுதிப்படுத்தியது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணியின் மனுஷ நாணயக்கார, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்ச ராகக் கடந்த முதலாம் திகதி ஜனா திபதியால் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் அவர் அந்தப் பதவியிலிருந்து விலகுகிறார் என ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

அத்துடன், தனது ஆரம்பகால கட்சியான ஐக்கிய தேசியக் கட் சிக்கு ஆதரவளிக்க உள்ளார் என்றும் ரணில் விக்கிரமசிங் கவை நேற்றுக் காலை சந்தித்தார் என்றும் ஹர்ஷா டி சில்வா அறி வித்துள்ளார். (ஐ)

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொடுக்க எத்தனிக்கி றேன். அடுத்த தீபாவளிக்கு முன் னர் சிறந்த தீர்வை பெற்றுக் கொடுக்க முயற்சிகளை மேற் கொள்கின்றேன்

– இவ்வாறு ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேன தெரிவித்தார்.

அத்தோடு அரசியல் கைதி களுக்கு எதிர்வரும் நாள்களில் நல்லதொரு முடிவை கொடுக் கவும் தான் நடவடிக்கை முன் னெடுத்துள்ளார் என்றும் ஜனா திபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன் தினம் நடைபெற்ற தேசிய தீபாவளிப் பண்டிகை நிகழ் வில் கலந்துகொண்டு உரையாற் றும்போதே ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித் தவை வருமாறு –

எதிர்க்கட்சித் தலைவர் சம் பந்தன் சொன்னதுபோல நான் ஜனாதிபதியாகிய நாளில் இருந்து தீபாவளிப் பண்டிகையின் முக்கி யத்துவத்தை உணர்ந்து ஆண்டு தோறும் தீபாவளி விழாவை நடத்திவருகின்றேன். நாட்டில் அனைவரும் ஒற்றுமையாக வும் சுதந்திரமாகவும் வாழ வேண் டும் என்பதுதான் என்னுடைய ஒரே நோக்கமாக இருக்கின்றது.

யார் எந்த மொழியானாலும், எந்த இனமானாலும் எனக்கு அது முக்கியமல்ல. அனைவரும் சம உரிமையுடன் இந்த நாட்டில் வாழ வேண்டும். என்னை ஜனாதி பதியாக்க தமிழர்கள் மிகப்பெரிய பங்காற்றினர். அதனை எனக்கு ஞாபகப்படுத்திய எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் நன்றி தெரி வித்துக்கொள்கின்றேன்.

என்னைப் போல வடக்கு மற் றும் கிழக்குக்கு அதிகளவில் பய ணித்த ஜனாதிபதி யாராகவும் இருக்க முடியாது. அதேவேளை என்னைப்போன்று வட பகுதி மக்களுக்குப் பணியாற்றிய ஜனாதிபதியாகவும் யாரும் இருந்த தில்லை. வட பகுதி மக்களுக்கு என்ன செய்யவேண்டுமோ, அதனை நிச்சயமாக செய்ய வேண்டும். பிரச்சினை தீர்க்கப் படவேண்டும். அதில் மாற்றுக் கருத்து இல்லை. நாம் இதுவரை யில் நிறைய விடயங்களை அவர்களுக்காகச் செய்தும் இருக் கிறோம்.

வடபகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த 90 வீத மான பொதுமக்களின் காணி களை விடுவித்திருக்கிறோம். வடக்கு – கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண ஜனாதிபதி செய லணியை மூன்று முறை கூட்டியி ருக்கிறேன். இந்த ஜனாதிபதி செலணியினால் 20 வருடமாக தீர்த்துவைக்கப்படாத பிரச்சி னைகள் இதன்மூலம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன என அதில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் உள்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் தெரிவித்தும் இருக் கிறனர்.

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதில் நான் அர்ப் பணிப்புடன் செயற்பட்டுக்கொண் டிருக்கின்றேன். எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் சொன் னதுபோல ஒரே நாட்டுக்குள் தீர்வு காணப்படவேண்டும் என்பதிலும் நான் உறுதியாக இருக்கின்றேன்.

ஆனால் கடந்த மூன்றரை ஆண்டுகளாக இந்தப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அதனால் தான் முன்னாள் பிரதமரை நீக்கி நான் புதியவரை நியமித்தேன். ஜனாதிதினன்டூதல்நான்தனித்து ஒரு தீர்மானத்தை எட்டிவிட முடி யாது. நாடாளுமன்றமும் எமக் குத் துணை நிற்கவேண்டும். கடந்த மூன்றரை ஆண்டுகாக இது நடக்கவில்லை. அதனால் புதிய பிரதமருடன் இணைந்து நாம் செயற்படுவோம்.

அரசியல் கைதிகள் விடயத் தில் அடுத்த வாரம் சட்ட மா அதி பர் மற்றும் சட்ட வல்லுநர்க ளுடன் ஆலோசனை நடத்த வுள்ளேன். அவர்களுக்கு மகிழ்ச்சியடைக்கூடிய முடிவொன் றைக் கொடுக்க நான் எத்தனிக் கின்றேன். பிரதமருடனும் இது குறித்து பேசி நல்ல முடிவுவொன் றைப் பெற்றுக்கொடுப்போம். எனக்குத் தேவை இந்த நாட்டில் நிரந்தர அமைதி. அதனை ஏற்படுத்தி நான் எந்த முயற்சி யையும் எடுப்பேன்.

கடந்த மூன்றரை ஆண்டு களாக இந்த தீர்வுகள் பின் தங்கிக்கிடந்தமை என்னுடைய தவறல்ல என்பதனை நான் கவலையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்ததீபாவளிக்கு முன்னர் சிறந்த தீர்வை பெற்றுக்கொடுக்க முயற்சிகளை மேற்கொள்கின் றேன். அரசியல் தீர்வைப் பெற் றுக்கொடுக்காமல் இந்த நாட்டை முன்னேற்றுவது கடினம் – என் றார். (ஐ)

## தீர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குளத்தில் அமைந்துள்ள தனி யார்திருமணமண்டபத்தில்நேற்று முன்தினம் புளொட் அமைப்பின் மத்தியகுழுக் கூட்டம் இடம்பெற் றது.

இதில் கலந்து கொண்டு கருத் துத் தெரிவித்தபோதே அவர் இத னைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் –

அரசியல் கைதிகளின் விடு தலை, காணாமல் போனவர் களுக்கான தீர்வு மற்றும் இனப் பிரச்சினைக்கான தீர்வைப் பிர தமர் மஹிந்த தருவார் என நம்பு கின்றோம்.

இவற்றுக்கான தீர்வை மஹிந்த அரசு எழுத்தில் தர வேண்டும். அனால் அவருடைய பழைய நடவடிக்கைகளினால் உடனடியாக நம்புவது கடின மாக இருக்கும்.

என்றாலும் அவரினால் நிச்ச யமாகச் செய்ய முடியும் என நம்பமுடியும். ஆனால் அவரு டன் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றவர்கள் இருப்பதுதான் பிரச்சினை.

இருந்தாலும் ஜனாதிபதி, மஹிந்த, ரணில் ஆகியோ ருடன்தான் எமது தீர்வு பற்றிக் கதைக்க முடியும். சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் முன்பு ஒன்றாக இருந்தபோது இவ்விடயம் நடக்காவிட்டாலும் ஒரு வாய்ப்பு இருப்பதாக நம்பி னோம். அதனால்தான் பல விடயங்களுக்காக அவர்களுடன் ஒத்துப்போயிருந்தோம் – என் றார். (ஐ)

## பல்டி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்படி தகவலை வெளி யிட்டார்.

அழுத்தம் காரணமாகவே எமது பக்கமிருந்த உறுப்பினர் கள் சிலர், மஹிந்த – மைத்திரி பக்கம் சென்று பதவியேற்றுள் ளனர்.

எதிர்வரும் 14 ஆம் திகதி வாக் கெடுப்பு நடைபெறும்போது எமது பக்கம் மீண்டும் வருவதற்கு 8 பேர் தயாராகவே உள்ளனர். ஆட் சியை ஐக்கிய தேசியக் கட்சி தலை மையிலான முன்னணியே கைப் பற்றும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை – என்றார். (ஐ)

# பிரிட்டிஷ் ஹரோ மேற்குத் தொகுதி எம்.பியுடன் நாடு கடந்த தமிழீழ அரசுப் பிரதிநிதிகள் பேச்சு

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான தொடர் சந்திப்புகளை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் துரிதப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடக்கவிருக்கும் ஜெனீவாக் கூட்டத்தொடரில் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (International Criminal Court) பரிந்துரை செய்யக் கோரி நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பிரித் தானிய நாடாளுமன்ற உறுப்பினர் களைத் தொடர்ச்சியாகச் சந்தித்து வருகின்றது.

அந்த வகையில் Harrow West தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் Gareth Thomas MP அவர்களுக்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்க உறுப்பினர்களுக்கும் இடையில் நவம்பர் 02ஆம் திகதி சந்திப்பொன்று நடைபெற்றது.



நாடு கடந்த தமிழீழ அரசின் மனித உரிமைகள் அமைச்சர் பத்மநாபன் மணிவண்ணன் மற்றும் விளையாட்டு மற்றும் சமூக நலன் பேணும் பிரதியமைச்சர் சொக்கலிங்கம் யோகலிங்கத்தினுடைய நெறிப்படுத்தலில் செயற்பாட்டாளர்களான நுஜிதன் இராசேந்திரம், டக்ளஸ் மென்டிஸன் அற்புதம், தியாகராஜா தோபகராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யுத்த குற்றத்தில் ஈடுபட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் இலங்கை பிரதமராக பதவியேற்றமை தொடர்பாகவும், வடக்கு, கிழக்கு ஒன்றிணைப்பு மற்றும் சமஷ்டி ஆட்சி என்பன தான் உயிருடன் இருக்கும் வரை ஒரு போதும் நிகழாது என ஜனாதிபதி மைத்திரி கூறியது பற்றியும், தற்போது ஏற்பட்பட்டுள்ள ஆட்சி மாற்றம் பற்றியும், இதனால் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மற்றும் சாதக, பாதக நிலைமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அது மட்டுமல்லாமல் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு (International Criminal Court) பரிந்துரைப்பதற்கான மனுவொன்றும் கையளிக்கப்பட்டதுடன் இலங்கையின் நீதிப்பொறியமைவுகளை கண்காணிக்கும் பொறுப்புடமைக்கான சர்வதேச நிபுணர் குழுவின் (Sri Lanka Monitoring and Accountability Panel) அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது குறிப்பிட்ட மனுவிற்கு ஆதரவு தெரிவித்து, அவர் அந்த மனுவில் கையொப்பம் இட்டமையுடன் இது தொடர்பாக அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாய்வு செய்து வருகின்ற பெப்ரவரி மாதமளவில் இது தொடர்பான நாடாளுமன்ற விவாதம் ஒன்றை ஒழுங்குசெய்வதாகவும் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தற்போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் நிலை, தமிழ் அரசியற் கைதிகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்த் தொடரும் கட்டுப்பாடில்லாத தடுத்து வைப்பு, தமிழ்ப் பிரதேசங்களில் பெருமளவிலான பாதுகாப்புப் படைகள் நிலைகொண்டுள்ளமை மற்றும் இத்தீவின் வடக்கு – கிழக்குப் பிராந்தியத்திலுள்ள தனியார் காணிகளில் இலங்கைப் பாதுகாப்புப் படைகள் தரித்திருக்கின்றமை ஆகியவற்றை கண்காணிப்பதன் பொருட்டு இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையிடும் பிரதிநிதி ஒருவரை நியமிக்குமாறும் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. காணாமல் ஆக்கப் பட்டோரின் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது

இலங்கையிலுள்ள பிரச்சினைகளை தொடர்ச்சியாக கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் இது தொடர்பாக பிரிட்டிஷ் வெளியுறவுத் துறை அமைச்சகத்துடன் தொடர்பு கொண்டு உரிய கேள்விகளை முன்வைப்பார் எனவும் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பஸ் கட்டணக் குறைப்பு; இன்று இறுதித் தீர்மானம்

பஸ் கட்டணத்தைக் குறைப்பது தொடர்பில் இன்று புதன்கிழமை இறுதித் தீர்மானம் எட்டப்படும் எனத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நடைபெறவுள்ள பேச்சில் கலந்துகொள்ளுமாறு அனைத்து பஸ் சங்கங்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.பி. ஹேமச்சந்திர தெரிவித்தார்.

எரிபொருளின் விலை குறைவடைந்தமைக்கு அமைய, பஸ் கட்டணத்தை 2 வீதத்தால் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை பஸ் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எரிபொருள் விலை குறைவடைந்ததன் பலனை மக்களுக்கு வழங்கத் தயாராகவுள்ளதாகத் தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருளின் விலை குறைக்கப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து எரிபொருளின் விலையைக் குறைப்பதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனமும் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாடாளுமன்றத்தை அரசு உடனே கூட்டவேண்டும்

## பொதுநலவாய அமைப்பும் கோரிக்கை

கொழும்பு, நவ. 07

இலங்கை அரசு மற்றும் இலங்கை மக்களுக்கு தேவையேற்படின், எந்த சந்தர்ப்பத்திலும் உதவிக் கரம் நீட்டத் தயாராகவுள்ளதாக பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பெட்றீசியா ஸ்கொட்லன்ட் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கூட்டி, நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை விரைவாக தீர்த்துக்கொள்ளவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் சார்பில் அவரது பேச்சாளர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் , ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நவம்பர் மாதம் 14ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கமைய, நாடாளுமன்ற நடவடிக்கைகள் மிகவும் முக்கியமானதென்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும். எனவே நாடாளுமன்றத்தைக் கூட்டி, நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல்களை விரைவாக தீர்த்துக்கொள்ளவேண்டுமென்பதையே பொதுநலவாய நாடுகள் சபை எதிர்பார்க்கிறது – என்றுள்ளது. (ஐ)

# காரைநகரில் நேற்று மர நடுகை




‘சுவாசம்’ நிறுவனத்தின் ஏற்பாட்டில் காரைநகரில் நேற்று மர நடுகை ஆரம்பித்து வைக்கப்பட்டது. ‘தாயகத்தில் கிராமங்களை பசுமையாக்குவோம்’ எனும் கருப்பொருளில் நடைபெற்ற இம் மர நடுகை நிகழ்வில் சிறுவர்கள் மர நடுகை செய்வதை படங்களில் காணலாம். *(படங்கள்: செல்வா)*




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.